Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-10 23-03-2005 புதன்கிழமை ஓசை 33

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11455)

பொதுசன நூலகம்
23 MAR 2005
மாநகர சபை,
யாழ்ப்பாணம்

# ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே இயல்பு வாழ்க்கை பிரச்சினைக்குரியதாகியுள்ளது

## சுவிஸ் வெளிவிவகாரத் தூதுவருடனான சந்திப்பில் சு.ப. தமிழ்ச்செல்வன்

(ஜெனீவா)

**பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை, சட்டம் என்பன விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியில் ஒழுங்காகப் பேணப்படுகின்றது. ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இது பிரச்சினைக்குரியதாக இருக்கின்றதென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். சுவிற்சர்லாந்தின் வெளிவிவகாரத் தூதுவர் தோமஸ் கிறிஸ் மிங்கர் தலை மையிலான உயர்குழுவுடனா ன சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.**

மேலும் சுனாமியின் பின்னான சமாதான முன்னெடுப்புகள் புனர்நிர்மாணம். மீள்குடியமர்வு, அபிவிருத்திக்கான முன்மொழியப்பட்ட இணைந்த பொறிமுறையின் தற்போதைய நிலமை குறித்து சந்திப்பின்போது அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவிக்கையில், " விடுதலைப் புலிகள் அரசியல் குறிக்கோளுடன் இயங்கிவருகின்ற (12 ஆம் பக்கம் பார்க்க)



## ஜெனீவாவில் ச.ம.சபை பிரதிநிதிகள் தமிழீழ அரசியல் விவகாரக்குழு சந்திப்பு

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினருடன் சர்வதேச மன்னிப்புச் சபை என்ற மனித உரிமைகள் இயக்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

ஜெனீவாவில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவை சர்வதேச மன்னிப்புச் சபையின் நிர்வாகி திருமதி இன்கரிட் மேசேஜ் சந்தித்து உரையாடினார். திருமதி இன்கரிடிடம், சுனாமிக்குப் பிந்திய கால வடகிழக்கு நிலமைகள் குறித்து தமிழ்ச்செல்வன் விளக்கினார். அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் படி இடப்பெயர்வுக்குள்ளான தமிழர்கள் இன்னமும் மீளக் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும், அவர்களின் வதிவிடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இடப்பெயர்வுக் குள்ளாகி முகாம்களிலும். நலன்புரி நிலையங்களிலும் தங்கிவாழும் மக்கள் பலவித குறைபாடுகளுக்கு உள்ளாகி இறப்போர் தொகை அதிகரித்து வருகிறது என்பதையும் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

### சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான

## ஐ.நா.வின் சிறப்புப் பிரதிநிதி இலங்கைக்கு விஜயம்

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி எஸ்கின் போலெஸ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான சிறப்புப் பிரதிநிதியாக எஸ்கின் போலெஸ் கடந்த வாரம் நியமிக்கப்பட்டிருந்தார்.ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்புடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீள் கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவதற்காகவே இவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன் தினம் காலிக்கு விஜயம் செய்த இவர் அங்கு மேற்கொள்ளப்டும் மீள் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டுள்ளார். (32)

## சுனாமி தொடர்பில் பாராளு.விவாதம்

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலை தொடர்பில் பாராளுமன்ற விவாதம் ஒன்று நடத்தப்படவுள்ளது பாராளுமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி இந்த விவாதம் நடத்தப்படும். (32)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்காதவரை அரசின் புனரமைப்பு நடவடிக்கைகளை புறக்கணிப்போம்

### - தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் அறிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக் கட்டமைப்பை சிறிலங்கா அரசு உருவாக்காத வரை அரசால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் புறக்கணிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறியதாவது; தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும். சிறிலங்கா அரசும் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலான இப்பொதுக கட்டமைப்பை உருவாக்காமல் நிவாரணப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரை ரணில் சந்திப்பார்

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு எதிர்வரும் எட்டாம் திகதி டில்லியில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது தனிப்பட்ட ரீதியிலான சந்திப்பு என்றும் இதில் அரசியல் விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படமாட்டாது என்றும் தெரியவருகின்றது.

## ஹெய்ட்டியிலிருந்து படையினரை உடன் திருப்பியழைக்கவேண்டும்

### கூலியாட்களாகப் பயன்படுத்துவதாக ஜே.வி.பி. குற்றச்சாட்டு

ஹெய்ட்டி நாட்டில் இருந்து சிறிலங்காப் படையினரை உடனடியாகத் திருப்பியழைக்க வேண்டும் என ஜே. வி. பி. கோரியுள்ளது. ஹெய்ட்டி நாட்டில் ஐக்கிய நாட்டு சமாதானப் படையில் இணைந்து செயறபடும் இலங்கை சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் ஹெய்ட்டி நாட்டில் இருந்து சிறிலங்காப் படையினர் திருப்பியழைக்கப்பட வேண்டும் என ஜே. வி. பி. கோரியுள்ளது. இலங்கை மக்களின் பணத்தில் நாட்டைப் பாதுகாக்க பயிற்றப்பட்ட படையினர் கூலியாட்களாக பயன்படுத்தப்படுவதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இலங்கையில் பிரிவினைவாத நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இன்னொரு நாட்டின் போராட்டத்தை நசுக்க முற்பட இலங்கைப் படையினரை அனுப்பியமை உகந்த தீர்மானம் அல்ல என்றும் ஜே. வி பி.தெரிவித்துள்ளது (32)

## திருமலை சாம்பல் தீவு சந்திப்பகுதியில் கடற்படைக் காவலரண்கள் பலப்படுத்தல்

திருகோணமலை புல்மோட்டை வீதியில் சாம்பல்தீவு சந்திப்பகுதியில் கடற்படையினர் தமது காவலரண்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் இத்தகவலை பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். வீதி அபிவிருத்தி அதிகாரசபை அப்பகுதியில் பறித்த கிரவல்களைக் கொண்டு பாரிய காவலரண்கள் வீதியின் இரு புறமும் அமைக்கப்பட்டு வருகின்றது இதேவேளை பிர்திப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா இவ்வாரம் திருக்கோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 25 ஆம் திகதி திருகோணமலைக்கு செல்லும் இவர் 26ஆம் திகதி கடற்படைத்தளத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுச் சேனைமோதல் குறித்துப் படையினர் க.கா குழுவுக்கு அறிவிக்கவில்லை

பொலநறுவை மாவட்டம் தீவுச்சேனைக் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் குறித்து இராணுவத்தரப்பு தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.இம் மோதல் இடம்பெற்றவுடன் அப்பகுதியில் பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டமை தெரிந்ததே (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தவறிவிட்டது

21.03.2005 அன்று காலை 9.00 மணிக்கு வட்டக்கச்சிக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் ஜீ.சுரேஸ் குமார்,மேரிறெஜினோட் சுரேஸ்குமார் என்பவர்களுடைய 2 தேசிய அடையாள அட்டைகளும், 2 நிரந்தர பயண அட்டைகளும் தவறவிடப் பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் அல்லது இவ் அடையாளஅட்டையின் முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் ஜீசுரேஸ் குமார். உழவனூர்சந்தி. (5871)

### CDவிற்பனை

சகலவிதமான கணினி மென்பொருள் CDக்கள் ,கணினி விளையாட்டு CDகள்,ஆங்கில கற்றல் CDகள் நிலவு COMகள் தமிழில் ஓர் வழி காட்டிய சுயகற்றல் CDகள் என்பன விற்கப்படும். நிலவு கணினித் தொழில் நுட்பம்கச் சேரிஅருகாமை, கிளிநொச்சி. (5876)

### விண்ணப்ப படிவங்கள்

மத்தியமாகாண அமைச்சுதிணைக்களங்களினால் கோரப்பட்டுள்ள சகல பதவிகளுக்கான விண்ணப்பபடிவங்கள் அனைத்தையும் பார்வையிட்டுப் பெற்றுக் கொள்ளலாம். நிலவு கணினித் தொழில்நுட்பம் கச்சேரி அருகாமை கிளிநொச்சி. (5875)

# பணி நிலைக்கான வேண்டுகை

அக்கராயன் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஆண்களுக்கான சந்தோசம் உளவளத்துணை நிலையத்திற்கு கீழ் வரும் பணிநிலைகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன் வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகை, கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ் வதிவிடச்சான்றிதழ் ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் நேர் முகத்தேர்விற்கு நேரில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணி நிலைகள்**

01.நிர்வாக உத்தியோகத்தர்
02.கணக்காளர்
03.சுத்திகரிப்பாளர்
04.பராமரிப்பாளர்
05.சமையலாளர்
06.வெளிக்கள அலுவலர்

**கல்வித் தகைமைகள்**

**பணிநிலை1** :- க.பொ.த(உ/த) தேர்ச்சியடைந்திருப்பதுடன் அரச, அரசார்பற்ற தனியார் நிறுவனங்களில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் பணிபுரிந்து முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை2** :- க.பொ.த(உ/த) வணிகப்பிரிவில் கணக்கியல் உட்பட 03பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

**பணிநிலை3** :- ஆண்டு 08 கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை4** :- ஆண்டு 10 கற்றிருப்பதுடன் பணி முன் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை5** :- சமையல்வேலையில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் வேலை செய்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**பணிநிலை6** :- க.பொ.த(சா/த) தேர்ச்சியடைந்திருப்பதுடன் அரச, அரசார்பற்ற தனியார் நிறுவனங்களில் ஆகக் குறைந்தது 02 வருடங்கள் பணிபுரிந்த முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்- 28.03.2005 திங்கட் கிழமை காலை 11.00 மணி.**

**இடம்-** :- தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நடுவப்பணியகம் (கந்தசாமிகோவில் அருகாமை கிளிநொச்சி ).

*ஆளணி நிர்வாகப்பகுதி,*
*தமிழர்புனர்வாழ்வுக்கழகம்,*
*நடுவப்பணியகம்,*
*கிளிநொச்சி.*

(சி.11572)

*-தமிழீழ காவல்துறையின் குற்றத்தடுப்புப் பிரிவு-*

# மாதர் சங்கங்களூடாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தமிழீழ காவல்துறையின் குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பரிசோதகர் பொ. பவானி அவர்களால் நாச்சிக்குடா, இலுப்பக்கடவை, குமுழமுனை ஆகிய பிரதேச மாதர் சங்கங்களின் ஊடாக அப்பிரதேச பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாச்சிக்குடாவில் இந்நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி பி.ப.3.00 மணியளவில் நாச்சிக்குடா காவல் பணிமனைப் பொறுப்பாளர் உபபரிசோதகர் ந.குகநாதன் தலைமையில் நாச்சிக்குடா மாவீரர் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டு பணிமனைகளில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளினால் பெண்கள் பாதிப்புறுவது பற்றிய விளக்கத்தை எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து பரிசோதகர் பொ. பவானி அவர்களால் பெண்கள் பாலியல் [illegible]புகளால் பாதிக்கப்படுவது பற்றியும், அவ்வாறு நிகழாமலிருக்க எடுக்கப்பட வேண்டிய விழிப்புணர்வு செயற்பாடுகள் பற்றியும், காவல்துறையினால் நீதிமன்றங் களினூடாக மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகள் பற்றியும் விளங்கப்படுத்தப்பட்டது.

இலுப்பக்கடவையில் இந்நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி மு.ப.11.00 மணியளவில் இலுப்பக்கடவை பாடசாலையில் அப்பிரதேசமகளிர் பொறுப்பாளர் கவிப்பிரியா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு இலுப்பக்கடவை காவல்பணிமனைப் பொறுப்பாளர். உபபரிசோதகர் க. தேவதாஸ் அவர்களின் சிற்றுரையைத் தொடர்ந்து பரிசோதகர் பொ.பவானி அவர்களினால் பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

குமுழமுனையிலும் அதே தினம் மாலை 4.00 மணியளவில் குமுழமுனை மாதர்சங்கத் தலைவி திருமதி இந்திராணி தலைமையில் நடைபெற்ற நிகழ்விலும் பரிசோதகர் பொ. பவானி அவர்கள் கருத்துரை வழங்கினார். இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் பெண்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

# அபிவிருத்தி சபை குழு தெரிவு

(விசுவமடு)

பிரமந்தனாறு தியாக தீபம் திலீபன் மருத்துவ நிலையத்தின் அபிவிருத்திச் சபை தெரிவுக்குழுக் கூட்டம் அண்மையில் பாலர் பாடசாலை மண்டபத்தில் திலீபன் மருத்துவநிலையவைத்தியர் திருமதி. ச.காயத்திரி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் இறுதியில் அபிவிருத்தி சபைக்குழுவுக்குத் தலைவராக செல்வி.க.கிருபாலினியும், உபதலைவராக திருமதி செல்வராணியும்,செயலாளராக ப.ரவீந்திரனு[illegible]ாக உறுப்பினர்களாக ஆறு [illegible] தெரிவுசெய்யப்பட்டனர். (14)

## பூநகரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## 40ஸ்ரீ 0774 இசுசு நல்ல நிலையிலுள்ள பாரஊர்தி

## பகிரங்க ஏல விற்பனை

30.03.2005 நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான இரண்டு புத்தக பதிவுகளும் உடைய 40ஸ்ரீ0774 இலக்க பாரஊர்தி பகிரங்க ஏல விற்பனை மூலம் எதிர்வரும் 30.03.2005 காலை 11.00மணிக்கு கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்க பாரஊர்தி தரிப்பிடத்தில் (பரந்தன் சந்தி) வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிப்பு வைப்பாக ரூபா.1000/= செலுத்தி கேள்வியில் பங்கு கொள்ளலாம். பாரஊர்தியினை பரந்தன் பாரஊர்தி தரிப்பிடத்தில் எதிர்வரும் 30.03.2005 காலை 10.00 மணி வரை இன்றில் இருந்து கடமை நேரங்களில் பார்வை யிடலாம். தெரிவு செய்யப்படுபவர் மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி பாரஊர்தியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப.தெ.வ.அ,
கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி.

(சி.11608)

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

# சிறப்புப் பேருந்துப் பணி

*25.03.2005 ஆம் நாள் நடைபெறும் புளியம்பொக்கணை நாகம்பிரான் பொங்கல் நாளினை முன்னிட்டு 25.03.2005 - 26.03.2005 ஆகிய இரு நாட்களும் நாயாறு -செம்மலை- அலம்பில்-முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு. குமுழமுனை-முள்ளியவளை - புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால்- புதுக்குடியிருப்பு. மாத்தளன்-புதுக்குடியிருப்பு. நெடுங்கேணி-ஒட்டுசுட்டான்-முத்துஐயன்கட்டு-புதுக்குடியிருப்பு. உடையார்கட்டு-விசுவமடு. கிளிநொச்சி-பரந்தன். வட்டக்கச்சி. இராமநாதபுரம்-கல்மடு. கந்தபுரம்-கோணாவில் -பரந்தன். வன்னேரி-அக்கராயன்-வட்டக்கச்சி.மல்லாவி-மாங்குளம்-கிளிநொச்சி. நட்டாங்கண்டல்-மல்லாவி-கோட்டைகட்டி-கிளிநொச்சி. புளியங்குளம்-கிளிநொச்சி. வெள்ளாங்குளம்-பூநகரி-பரந்தன். தாழையடி-பரந்தன். முகமாலை-பரந்தன் ஆகிய இடங்களிலிருந்து கோவில்வரை பேருந்துப் பணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.*

தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11609)

குருவடி சரணம் ஓம்சக்தி திருவடிசரணம்



## மேல் மருவத்தூர் அருள்மிகு ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றம் – புதுக்குடியிருப்பு

# சமூகநல யாகம்

## சுனாமியால் இறந்து போனவர்களுக்கான ஆத்ம சாந்திக் கிரிகை

காலம் : 24.03.2005 வியாழக்கிழமை
நேரம்: காலை 8.30 மணிமுதல்

அன்றைய தினம் மன்றத்தில் சமூகநல யாகம் நடைபெற்று தொடர்ந்து இலங்கையில் சுனாமியால் இறந்து போனவர்களுக்கான ஆத்மசாந்திக் கிரிகைகள் முல்லை - பொக்கணை கடற்கரையில் நடைபெற உள்ளன.

அனைவரும் வருக அன்னதானத்துடன் அன்னையின் அருளைப் பெறுக.

"உலகமெலாம் சக்தி நெறி ஓங்க வேண்டும்
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்"

ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம்,
4ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(சி-11573)

## கசூரினாக் கடற்கரையில் இளைஞர் தொல்லை அதிகரிப்பு

(காரைநகர்)

யாழ்.காரைநகர் கசூரினாக் கடற்கரையில் இளைஞர் குழுக்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

காரைநகரிலுள்ள கசூரினா கடற்கரைக்கு ஓய்வு மற்றும் விடுமுறை காலங்களில் பொழுதைக் கழிப்பதற்காக வந்து சேரும் இளைஞர் குழுக்கள் மது அருந்திவிட்டு வீதிகளில் அலைந்து திரிகின்றனர்.

அத்துடன் வீதியால் செல்லும் பெண்கள் மீது சேஷ்டைகளில் ஈடுபடுவதுடன் குழுமோதல்களிலும் ஈடுபடுகின்றனர்.

எனினும் காரைநகர் பகுதியில் நிலை கொண்டுள்ள பொலிசார் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (33)

தெல்லிப்பளைப் பகுதியில்

## ராணுவப் பாதுகாப்பு வலயம் அகற்றப்படாமல்; புற்றுநோய் வைத்தியசாலையால் பயனில்லை

(தெல்லிப்பளை)

**யாழ். தெல்லிப்பளையில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தினை அகற்றாமல் அங்குள்ள புற்றுநோய் வைத்தியசாலையை நவீன மயப்படுத்தினாலும் அதன் மூலம் மக்கள் பூரண பயனடைய மாட்டார்கள் என வைத்தியஅதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.**

மேற்படி வைத்தியசாலையை நவீன மயப்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச நிதி உதவியுடன் பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.எனினும் மக்கள் இயல்பான முறையில் நடமாடவோ, குறிப்பிட்டநேரத்திற்கு வைத்திய அதிகாரிகளோ, அல்லது ஊழியர்களோ இயல்பாக கடமைகளுக்குச் செல்லமுடியாத படையினரது கெடுபிடிகள் நிறைந்த இடத்தில் இவ் வைத்தியசாலை அமைந்திருக்கிறது.

இதனால் இதனைப் புனரமைத்து நவீன மயப்படுத்து வதில் மக்கள் முழுப்பயனடைய மாட்டார்கள் எனத் தெரிவிக்கும் வைத்திய அதிகாரிகள் மேற்படி வைத்திய சூழலில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டாலே அங்கு இயல்பான சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

## யாழ்.ஆடியபாதம் வீதி புனரமைப்பு எப்போது?

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆடியபாதம் வீதி நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் உள்ளபோதும் அதனைப் புனரமைக்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இவ் வீதியை புனரமைப்பதற்காக கற்கள் பறிக்கப்பட்டிருப்பினும் அவற்றைக் கொண்டுவீதியைச் செப்பனிட நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

## பானாவெட்டி வைத்தியசாலையில் மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு

(தொல்புரம்)

யாழ்.தொல்புரத்திலுள்ள பானாவெட்டி அரசினர் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

இதனால் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் இவ்வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் போதாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (33)

–வடமராட்சி கடற்கரையோரத்தில்

## கடற்பாதுகாப்பு அணை நிறுவ 240 கோடி ரூபா தேவைப்படும்!

க.தொ.கூ.ச.ச செயலாளர் க.சூரியகுமார் தகவல்

(வடமராட்சி)

யாழ். வடமராட்சி கடற்கரையோரங்களில் நிரந்தர கடற்பாதுகாப்பு அணையை நிறுவுவதற்கு 240 கோடி ரூபா நிதி தேவைப்படும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச சம்மேளனச் செயலாளர் க. சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கடல் அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கென இவ் அணை தொண்டமனாறு தொடக்கம் பொற்பதி வரையில் நிறுவப்படவுள்ளது.

உடனடியாக அணை அமைப்பதற்குத் தேவைப்படும் இவ் 240 கோடி ரூபா நிதியை வழங்க "வேள்ட்விஷன்" என்ற சர்வதேச தொண்டர் அமைப்பு முன்வந்துள்ளது என சூரியகுமார் மேலும் தெரிவித்துள்ளார். (33)

-முகமாலைப் பகுதியில்-

## ராணுவ சோதனைச்சாவடி மேலும் விஸ்தரிக்கப்படுகின்றது

(முகமாலை)

யாழ். முகமாலையிலுள்ள இராணுவ சோதனைச்சாவடியை விஸ்தரிக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டுவருவதாக யாழ். மாவட்ட இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் நிலை கொண்டுள்ள 55 ஆவது படையணியின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் இவ்விஸ்தரிப்புப்பணிகளில் அப்படையணியின் சிப்பாய்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இவ்விஸ்தரிப்புப் பணிகள் மூலம் முகமாலை சோதனைச் சாவடியூடாக பயணிக்கும் பயணிகள் மீதான சோதனைக் கெடுபிடிகள் மேலும் அதிகரிக்கப்படுமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (33)

-சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால்-

## இலவச கணனிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன!

(யாழ்ப்பாணம்)

உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களின் கணனிக் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் இலவச கணனிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக நாளை மாலை 3.30 மணிக்கு முதலாவது இலவச கணனிப் பயிற்சி நிலையம் மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு மாணவர் பேரவை உறுப்பினர் இ.புவிராஜ் தலை மையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் கந்தசாமி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் என்.சண் முகலிங்கன் அவர்களும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி அவர்களும் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.கிருஸ்ணா அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சி நெறிக்குரிய மாணவர்கள் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களில் நேர்முகத்தேர்விற்குத் தோற்றியவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முற்றுமுழுதாக இலவசமாகவே இப்பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன. பயிற்சி முடிவில் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் பார்வையிடலாம்.

அடுத்த கட்டமாக தென்மராட்சி, வடமராட்சி தீவகம் போன்ற பகுதிகளிலும் கணனிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கணனிக் கல்வியைத் தொடர விரும்பியும் பொருளாதார நெருக்கடிகளினால் கற்கமுடியாமல் இருக்கின்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இதில் முன்னுரிமை அடிப்படையில் அனுமதிகள் வழங்கப் படவுள்ளன. என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தெரிவித்துள்ளது. (33)

-200 மீற்றர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக-

## திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரம் முன் கடற்றொழிலாளர் பெண்கள் அமைப்பு ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலையில் மணிக்கூட்டுக் கோபுர சந்திக்கு அண்மையில் திருக்கோணமலை கடற்றொழிலாளர் பெண்கள் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட திருகோணமலை கடற்பிரதேச சத்தில் கடற்கரையில் இருந்து இருநூறு மீற்றர் தூரத்திற்கு அப்பால் கட்டடங்களை அமைக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் கட்டளைகளை அரசு மீளப் பெறவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் வலியு றுத்தியுள்ளனர்.

இதேவேளை சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடியாக வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதோடு, மீன்பிடிப் படகுகளை இழந்தவர்களுக்குப் படகுகளை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக சுனாமிப் பேரலைகளின் தாக்கம் இடம்பெற்று மூன்று மாதகாலமான நிலையிலும் பல குடும்பங்கள் இன்றும் தற்காலிக கூடாரங்களில் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்வதுடன் தமது தொழிலை மீண்டும் ஆரம்பிப்பதற்கான படகுகள், வலைகள் அற்ற நிலையில் வேதனையால் வாடுவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்காலிக கூடாரங்களைப் பொறுத்தவரை வெப்பநிலை மிகவும் அதிகரித்துள்ள இந்தக் காலகட்டத்தில் தங்கள் குடும்பங்களின் உடல் நிலை கூட மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதில் தேசிய பாடசாலைகளில் புதிய நடைமுறை

சனாதிபதி பணிப்பிற்கமைய நடவடிக்கை

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளுக்கு தரம் ஒன்று வகுப்பிற்கு மாணவர்களை அனுமதிக்கும் நடைமுறைகள் அதிபர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்திடமிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப் புதிய நடைமுறை 2006 ஆம் ஆண்டிற்கு தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பொருட்டு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அமுலுக்கு வருவதாக சிறிலங்காவின் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி.மெல் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் தரம் ஒன்று அனுமதி தொடர்பாக நாடளாவியரீதியில் ஏற்பட்டுள்ள பல்வேறு குளறுபடிகளையும் ஒழுங்கீனங்களையும் அடுத்தே சனாதிபதியும் . கல்வி அமைச்சருமான சந்திரிகா குமாராதுங்கவின் பணிப்புரையின் பேரிலேயே கல்வியமைச்சு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

இப்புதிய நடைமுறையின்படி பெற்றோர்கள் தமது பிள்ளையை பாடசாலைக்குச் சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவத்தை கல்வி அமைச்சுக்கே அனுப்பவேண்டும். ஒரு பிள்ளையின் பெயரில் மூன்று பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

அதேவேளை தங்களால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அனுமதிக்கும் சாத்தியத்தை உறுதி செய்து அதிபர் அல்லது பழைய மாணவர் சங்கத்தின் கடிதம் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். இவற்றுடன் பிறப்புச்சான்றிதழ், வீட்டு உறுதிப்பத்திரம் வாக்காளர் இடாப்பு பதிவு, வதிவிடச் சான்றிதழ் என்பவையும் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

கல்வி அமைச்சு இத்தகவல்களை கணனிமயப்படுத்திப் பகுப்பாய்வு செய்து மாணவர்களை தெரிவு செய்யவுள்ளது.

ஏப்ரல் 12ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப்படிவங்களை தகுதிவாய்ந்த குழுவொன்று பரிசீலித்து தேசிய பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ள மாணவர்களின் தற்காலிக பெயர்ப்பட்டியலை ஜுன் நடுப்பகுதியில் இணையத்தளம்,புதினப் பத்திரிகை என்பவற்றில் வெளிடவுள்ளது. இது தொடர்பாக பெற்றோரிடமிருந்தான மேன்முறையீடுகள் ஜுலை மாதம் நடுப்பகுதி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓகஸ்ட் முதல் வாரத்தில் இறுதி முடிவுகள் வெளியிடப் படும்.

இதேவேளை போலியான தகவல்கள், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் விண்ணப் பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதோடு விண்ணப்பித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்த முழுவிபரங்களை ஈழநாதம், கண்டிவீதி கிளிநொச்சி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## பங்குனி உத்தரப் பொங்கல் வெள்ளிக்கிழமை நடைபெறும்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பங்குனி உத்தரப்பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பகல் இரவு முழுவதும் நடைபெறவுள்ளது.

இப்பொங்கல் விழாவுக்கு தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்து சேவைகளும்,பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (14)

## நிர்வாகிகள் தெரிவு

பரந்தன் பிரதேச புதிய வர்த்தக சங்க தெரிவுக் கூட்டம் அண்மையில் பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் கண்டாவளை கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் வின்சன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தலைவராக ஜெ.ஜெயசுதன்,உபதலைவராக ந.சிவா, செயலாளராக க.விநாயககுமார்,உப செயலாளராக பொ.இலட்சுமணன், பொருளாளராக இ.கண்ணன் ஆகியோரும் எட்டு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (14)



மாவீரர்கள் நினைவு நிகழ்வில்....

# கௌசல்யன் உள்ளிட்ட மாவீரர்களின்

# 41 ஆம் நாள் நினைவு கூரல் நிகழ்வு

**லெப்.கேணல் கௌசல்யன், மேஜர் செந்தமிழன், மேஜர் புகழன் 2ஆம் லெப். விதிமாறன், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோரின் நினைவு சுமந்த 41ஆம் நாள் நினைவு வணக்க நிகழ்வு பிரான்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை லாப்பிளான் சென்தெனியில் நடைபெற்றது.**

மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரான்ஸ் கிளைப் பிரதிநிதி சசி ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியினை புலிகளின் குரல் வானொலிப் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றி வைத்தார்.

மாவீரர்களுக்கான ஈகச்சுடரினை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதி முகுந்தன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கமும், மலர் வணக்கமும் செலுத்தப்பட்டு தொடர்ந்து எழுச்சி நடனங்களும், எழுச்சி இசை நிகழ்வும் நடைபெற்றன. இந்நிகழ்வில் புலிகளின் குரல் வானொலிப் பொறுப்பாளர் தமிழன்பன் சிறப்புரையாற்றினார். மண்டபம் நிறைந்த மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர். நம்புங்கள் தமிழீழம் நாளைபிறக்கும் எனும் எழுச்சிப் பாடலுடனும் தேசியக்கொடி இறக்கும் வைபவத்துடனும் இந்நிகழ்வு இரவு 7.30 மணிக்கு நிறைவு பெற்றது.

## தையல்பயிற்சி ஆரம்ப விழா

(முல்லை)

நிகொட் நிறுவன சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நடாத்தப்படும் தையல் பயிற்சி ஆரம்ப விழா கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு செம் மலை கிழக்கு தற்காலிக பொது மண்டபத்தில் நடைபெற்றது.

திட்ட கிராம இணைப்பாளர் கணேசலிங்கம் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் கருத்துரைகளை நிகொட் திட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பயிற்சித்திட்ட இணைப்பாளர் விமல், செம்மலை கிழக்கு கிராம அலுவலர் அமிர்தராஜினி, கிராம புனரமைப்புத் தலைவர் மயில்வாகனம் ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்வில் நிறுவன உத்தியோகத்தர்கள் தையல் பயிற்சி ஆசிரியர் பயிற்சியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20)

## மன்/சாந்திபுரம் அ.த.க பாடசாலையில் நிரந்தரக் கட்டடம் அமைக்க ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இருபத்துநான்கரை இலட்சம் ரூபா செலவில் நிரந்தரக்கட்டடம் அமைப்பதற்கு "கார்ப்" திட்டத்தினூடாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மேற்கொள்ளும் பொருட்டு அதற்கான பணிகள் தனியார் ஒப்பந்தக்காரரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கென ஏற்கனவே மன்னார் அரசஅதிபரினால் ஐந்து ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

## முல்லைத் தபாலகம் இயங்க தற்காலிக கட்டடம் வழங்கல்

சுனாமியினால் முற்றுமுழுதாக அழிந்த முல்லை மாவட்ட தபால் அலுவலகம் இயங்குவதற்கான தற்காலிகக் கட்டடத்தினை முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் வழங்கினார்.

விளையாட்டுத்துறைக்குச் சொந்தமான கட்டடமே தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து இதுவரை நாளும் முல்லை தபாலகம் முள்ளியவளை உபதபால் அலுவலகத்திலேயே இயங்கி வருகின்றது.

சுனாமியால் உயிரிழந்த வர்களுக்கான இறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுப்பதற்கான முத்திரை களைப் பெறுவதற்கு முல்லைத் தீவில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர். அத்துடன் அலுவலகத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இச்செயலகம் இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். இவை அனைத்தையும் நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே இக்கட்டடம் வழங்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (20)

## காணி உரிமைப் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காண்பது தொடர்பில் பயிற்சிப்பட்டறை

(திருமலை)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் காணி உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நான்கு நாள் வேலைப்பட்டறையை நேற்று முன்தினம் காலை மாகாணசபையின் பிரதம செயலாளர் சி.ரங்கராஜா உப்புவெளியில் அமைந்துள்ள மாகாணசபை விருந்தினர் விடுதியின் கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

நிகழ்வுக்கு மாகாணக்காணி அமைச்சின் மேலதிக செயலாளர் க.பரமலிங்கம் தலைமை வகித்தார்.

வடக்கு கிழக்கில் யுத்தத்தால் வீடுகளை இழந்த மக்கள் அரச நிதி உதவியுடன் தமது வீடுகளை மீள நிர்மாணிப்பதில் எதிர்நோக்கும் காணி உரிமைப்பிரச்சினைகளை இலகுவில் தீர்த்து வைப்பதற்கான வழி முறைகளை வகுப்பதற்கான முதலாவது வேலைப்பட்டறையாக இது அமைகிறது.

யுத்தத்தில் வீடுகளை இழந்த மக்கள் தமது வீடுகளை மீள நிர்மாணிப்பதற்கு உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் (நீரப்) நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இத் திட்டத்தின் கீழ் நன்மை பெறும் பயனாளி தாம் நிர்மாணிக்கும் வீடு அமைந்துள்ள காணியின் உரிமையினை சான்றுப்படுத்துமாறு கோரப்படுகின்றார். இன்றைய நிலையில் யுத்தத்தினால் தமது காணி உரிமையை நிரூபிக்கும் வலிதான ஆவணங்களைப் பலரும் இழந்துள்ளனர். இவ்வுதவித் திட்டத்தின் கீழ் காணி உரிமையை நிரூபிக்கத் தவறுமிடத்து இவ்வுதவியை பெற்றுக் கொள்ள முடியாத நிலை பாதிக்கப்பட்டமக்கள் பலருக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட பிரச்சினைகளைக் காணித் திணைக்களம் இனங்கண்டு இவற்றிற்கு இலகுவில் தீர்வு காணுவதற்கு மாவட்டக்காணிச்செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இச் செயலணிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு ஏசியன் பவுண்டேஷனின் உதவியுடன் இவ்வேலைப் பட்டறை நடத்தப்படுகிறது. அங்குரார்ப்பண நிகழ்வில் மாவட்டங்களின்அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் காணி ஆணையாளர்கள் மற்றும் காணி தொடர்பான அதிகாரிகள் பங்குபற்றினர். (25)

## அன்னை பூபதி நினைவு நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் சிரமதானப் பணிகள்

(புதுக்குடியிருப்பு)

தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் சிரமதானப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் ஞானஒளி கல்வி நிலைய மாணவர்களும் பவான் குடியிருப்பு இளைஞர்களும் இணைந்து இராசரத்தினம் அவர்களின் தலைமையில் விளையாட்டு மைதானம் ஒன்றை சீர் செய்துள்ளனர். இம் மைதானத்திற்கு மில்லர் விளையாட்டு மைதானம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இறுதியில் வலயப் பொறுப்பாளர் பொன் அமுதன் கருத்துரை வழங்கினார். (08)

## தற்காலிக குடியிருப்பில் முன்பள்ளி திறந்து வைப்பு

(முல்லை)

அளம்பில் இராமசாமித் தோட்டத்தின் தற்காலிகக் குடியிருப்பில் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வேல்ட்விசன் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட முன்பள்ளி திறப்புவிழா த.பு.க பிரதிநிதி செ.பிரியதர்சினி தலைமையில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

பொது ஈகச்சுடரினை வவுனியா த.பு.க உதவிப்பணிப்பாளர் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியினை நிதர்சனப் போராளி அருணா ஏற்றினார்.

த.பு.கழகக்கொடியினை, த.பு.க பிரதிநிதி இராஜகுலேந்திரம் ஏற்றினார்.

முன்பள்ளிக்கல்வி மே.நிறுவன கொடியினை மு.ப.க.மே நிலைய முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி தட்சாயினி ஏற்றினார்.

கட்டடத்தினை வேல்ட்விசன் நிறுவன முன்பள்ளி இணைப்பாளர் விக்னேஸ்வரன் திறந்துவைத்தார்.

கருத்துரைகளை அளம்பில் பங்குத்தந்தை யூட்அமலதாஸ் அடிகளார், வேல்ட்விசன் நிறுவனப் பிரதிநிதி அன்ரனிதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கற்றல் உபகரணங்களை அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி அன்ரனிதாஸ், வேல்ட்விசன் நிறுவனப் பிரதிநிதி ந.விக்னேஸ்வரன், மு.அ. இணைப்பாளர் தட்சாயினி, றோ.க பாடசாலை அதிபர் ஆகியோர் வழங்கினார்கள். (20)

### ~புளியம் பொக்கணை உற்சவ காலத்தில்~

## உணவு கையாளும் நிலையங்களை நடாத்தும் உரிமையாளர், பணியாளருடன் கலந்துரையாடல்

எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் புளியம்பொக்கணை ஆலய உற்சவ காலத்திற்கு உணவு கையாளும் நிலையங்கள் நடாத்தும் உரிமையாளர்கள், பணியாளர்களுக்கான சுகாதாரம் தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழன் காலை 9.00 மணிக்கு கண்டாவளை புளியம்பொக்கணை வீதியில் அமைந்துள்ள கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்திற்கு உணவகம். தேநீரகம், குளிர்பான விற்பனை (வாகன, துவிச்சக்கரவண்டி ஐஸ்ரிம் விற்பனை உட்பட) மிட்டாய், சுவையூட்டிய சிற்றுண்டிகள், மென்பானங்கள் (சர்பத் விற்பனை உட்பட) பழ விற்பனை செய்யவுள்ள அனைவரும் தவறாது கலந்து கொள்வதுடன் இந்நாளில் உணவு கையாளுகைக்கான சுகாதார அனுமதியையும் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## இலவசக் கணினிப் பயிற்சி நெறி

(முல்லை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதி மாணவர்களுக்கும் கல்வி கற்று தொழிலற்று இருப்பவர்களுக்கும் முல்லை ரெக் நிறுவனத்தினால் இலவசக் கணினிப் பயிற்சி ஆரம்பமாகவுள்ளது.

இதில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் மட்டும் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முடியுமெனவும், அதற்கான விண்ணப்பங்களை ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள பொருண்மிய மதியுரையகத்தில் ஒப்படைக்குமாறும் முல்லை ரெக் நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (20)

# ஐ.நா. பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்தும் திட்டம் குறித்து விரைந்து முடிவெடுக்குக!

## –கொபி அனான் அங்கத்துவ நாடுகளிடம் வேண்டுகோள்

(நியூயோர்க்)

**ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்குமாறு ஐ.நா சபையின் பொதுச்செயலர் கொபி அனான் அங்கத்துவ நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் 63 பக்க அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். ஐ.நா சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இப்போது 15 நாடுகள் மட்டுமே இடம் பெற முடியும். இதை 24 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. ச்ர்வதேச சமுதாயத்துக்கு பரந்த அளவில் பிரதிநிதித்துவம் கொடுக்கும் வகையில் பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது அவசியமாகும்.

இதுதொடர்பாக உறுப்பு நாடுகள் விரைவில் ஒரு முடிவு எடுக்க வேண்டும். வருகிற செப்ரெம்பர் மாதம் உலகத் தலைவர்கள் மாநாடு நடக்கிறது. அதற்கு முன்பாக சபையை விரிவுபடுத்த உறுப்பு நாடுகள் சம்மதம் தர வேண்டும்.

சபையை விரிவுபடுத்துவதில் இரண்டு திட்டங்கள் உள்ளன. ஒரு திட்டப்படி இப்போதுள்ள ஐந்து நிரந்தர உறுப்பினர்களுடன் கூடுதலாக புதிய ஆறு உறுப்பினர்களைச் சேர்க்கலாம். இப்போதுள்ள பத்து தற்காலிக உறுப்பினர்களுடன் மேலும் மூன்று உறுப்பு நாடுகளையும் சேர்க்கலாம். இது ஒரு திட்டம். இரண்டாவது திட்டப்படி நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்து, தற்காலிக உறுப்பினர்கள் பத்து தவிர, எட்டு புதிய உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகள் பதவியில் இருப்பார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு உறுப்பினர் பதவியை புதுப்பிப்பதா வேண்டாமா என்பது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முடிவு செய்யப்படும். இது தவிர ஒரு தற்காலிக உறுப்பினரும் இடம் பெறுவார்.

பாதுகாப்புச் சபையில் எந்த மாற்றம் செய்தாலும் அதற்கு மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையான 191 இன் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு வேண்டுமென அந்த அறிக்கையில் கூறியுள்ள கொபிஅனான் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது சட்டபூர்வமாக போர் தொடுக்க வேண்டுமானால், அதற்கு என்ன விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டு என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும்.

2015 ஆம் ஆண்டுக்குள் உலகின் வறுமையை ஒழிக்க, பணக்கார நாடுகள் தங்கள் வருவாயில் 0.7 சதவீதத்தை கொடுக்க வேண்டும். 53 உறுப்பினர் கொண்ட மனித உரிமைக்கமிஷன் ஒழிக்கப்பட வேண்டும். இதற்குப் பதிலாக சிறிய அளவிலான மனித உரிமைக்குழுவை உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுக்க வேண்டுமென மேலும் கூறியுள்ளார்.



ஈராக்கின் மொசூல் நகரில் நேற்று முன்தினம் வீதியோரக் கண்ணிவெடியில் சிக்கி சேதமடைந்த அமெரிக்க இராணுவ வாகனம்.

# பங்களாதேஷில் சூறாவளி 25 பேர் பலி; 500 பேர் காயம்

(டாக்கா)

பங்களாதேஷில் இரண்டு மாவட்டங்களில் சூறாவளி தாக்கியதில் 25 பேர் பலியாயினர். 500 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷில் கைபாந்தா மற்றும் ரங்பூர் மாவட்டங்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை கடும் சூறாவளி தாக்கியது. நூற்றுக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மூவாயிரத்துக்கும் அதிகமான வீடுகள் தரைமட்டமாயின. ஐயாயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். இதுவரை 25 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 500 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

சூறாவளி காரணமாக மின் மற்றும் தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் இந்த மாவட்டங்கள் இருளில் மூழ்கியுள்ளன. மீட்புப் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.



மேற்குக்கரையின் துல்கரெம் நகரின் கட்டுப்பாட்டை இஸ்ரேலிய படையினர் சம்பிரதாய பூர்வமாக பலஸ்தீனப் பொலிசாரிடம் ஒப்படைக்கின்றனர். இதன்போது இஸ்ரேலிய இராணுவ அதிகாரியான கேணல் தமிர்கெய்மனும் பலஸ்தீன பொலிஸ் அதிகாரியான அபுபாசாவும் கைகுலுக்கி நகரின் பிரதான வாசலில் பூட்டப்பட்டிய கதவைத்திறந்தனர்.

# சீனாவுக்கு ஆயுதங்களை விற்பதற்கான தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியம் திட்டம்

## -அமெரிக்கா எதிர்ப்பு

(பீஜிங்)

சீனாவுக்கு ஆயுதங்கள் விற்க விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கும் ஐரோப்பிய யூனியனின் திட்டத்துக்கு அமெரிக்கா எதிர்ப்பு விடுத்துள்ளது.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த நாடுகள் சீனாவுக்கு ஆயுதங்கள் விற்கத் தடை விதித்திருந்தவை இத்தடையை நீக்க ஐரோப்பிய யூனியன் திட்டமிட்டுள்ளது. அமெரிக்கா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தைவானுக்கு எதிராக பிரிவினை தடுப்புச் சட்டத்தை சீனா கொண்டு வந்துள்ள நிலையில் ஐரோப்பிய யூனியனின் தடைநீக்கப்படுவது ஆபத்தை ஏற்படுத்தும். ஆசியாக் கண்டத்தில் ராணுவச் சமநிலையை பாதிக்கும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா உட்பட ஆசிய நாடுகளில் கடந்த ஆறு நாட்களாக ரைஸ் பயணம் மேற்கொண்டுள்ளார் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் சீனா சென்றார். அப்போது பீஜிங்கில் இக்கருத்தை தெரிவித்தார். அதேபோல், பிரிட்டனும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

# பத்திரிகையாளருக்கு நேபாள அரசு எச்சரிக்கை

(காத்மாண்டு)

நேபாளத்தில், அரசுக்கெதிராக செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை ஒடுக்கத் தவறிய பிரதமர் ஷெர்பகதூர் துபா தலைமையிலான ஆட்சியை மன்னர் ஞானேந்திரா கடந்த மாதம் கலைத்து அவசர நிலையை அமுல்படுத்தினார். இதே வேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை சனநாயகத்தை வற்புறுத்திய ஆறு பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அரசின் அடக்கு முறையைக் கண்டித்து செய்தி வெளியிட்ட 'ஆங்குஷ்' என்ற வார பத்திரிகையின் ஆசிரியர் திபேந்திரசவுகான், மற்றொரு பத்திரிகை யாளர் கோபால், நேபாள பத்திரிகை சங்க செயலாளர் விஷ்ணு நிஷ்தூரி ஆகியோரே கைது செய்யப்பட்டனர். காலையில் கைது செய்யப்பட்ட இவர்கள் நள்ளிரவில் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

# கச்சாய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க சவுதிஅரேபியா முடிவு

ச்ர்வதேச அளவில் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நாள் தோறும் 15 லட்சம் பெரல் கச்சாய் எண்ணெய்யை கூடுதலாக உற்பத்தி செய்ய சவுதிஅரேபியா முடிவு செய்துள்ளது.

கச்சாய் எண்ணெய் விலை பெரல் ஒன்றுக்கு 50 டொலரைத் தாண்டி விட்டது. விலை உயர்வால் பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் 15 இலட்சம் பெரல் கச்சாய் எண்ணெய்யைக் கூடுதலாக உற்பத்தி செய்ய சவுதி அரேபியா முடிவெடுத்துள்ளதைப் பல நாடுகள் வரவேற்றுள்ளன.

மணிலா வந்துள்ள சவுதி அரேபியப் பெற்றோலிய அமைச்சர் அலி அல் நைபி நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது;

கச்சாய் எண்ணெய் விலை உயர்வால் வழங்கலில் பாதிப்பு ஏற்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. தாரளமாகவே வழங்கல் நடக்கிறது. விலை உயர்வைக் கட்டுப்படுத்த தேவைக்கேற்ப கூடுதலாக கச்சாய் எண்ணெய் உற்பத்தி செய்ய சவுதி அரேபியா முடிவெடுத்துள்ளது. தினமும் 15 இலட்சம் பெரல்கள் கூடுதலாக உற்பத்தி செய்ய தற்போதைக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வழங்கலில் பற்றாக்குறை ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தைப் போக்க வேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம் கச்சாய் எண்ணெய் விலை உயர்ந்து கொண்டே செல்வதால் வளரும் நாடுகளின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. அதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# மாணவனின் துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியை, மாணவர் உட்பட 8 பேர் பலி

## -அமெரிக்காவில் நடந்த துயரம்!

(வேஷிங்டன்)

மாணவர்கள் மற்றும் ஆசிரியை உட்பட எட்டுப் பேரை பள்ளிக்கூட மாணவன் சுட்டுக் கொன்றுள்ளான் அமெரிக்காவின் மின்னி கோட்டாப் பகுதியிலுள்ள ரெல்லேக் பள்ளியில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார் கள்.

இந்தப் பள்ளிக்கூடத்துக்குள்திடீர் என்று ஒரு மாணவன் துப்பாக்கியுடன் நுழைந்தான். அவனது சட்டை பையிலும் இன்னொரு துப்பாக்கி இருந்தது. அந்த மாணவன் திடீரென்று வகுப்பறைக்குள் புகுந்து மாணவர்களை நோக்கி சரமாரியாக சுட்டான். இதை சற்றும் எதிர்பாராத சக மாணவர்களும், ஆசிரியைகளும் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

மாணவன் சுட்டதில் மாணவர்கள், மாணவிகள், ஆசிரியை, பள்ளிக்கூட காவலாளி உட்பட ஆறு பேர் மரணமடைந்தனர்.

20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர்.

துப்பாக்கியால் சுட்ட மாணவனும் குண்டு பாய்ந்து இறந்து விட்டான். துப்பாக்கியால் அவன் தன்னைத் தானே சுட்டானா அல்லது காவலாளி அந்த மாணவனை சுட்டுக் கொன்றாரா என்பது பற்றி உடனடித் தகவல் இல்லை.

பள்ளிக்கூடத்தில் அந்த மாணவன் தாக்குதல் நடத்துவதற்கு முதல் நாள் மாலை தனது வீட்டிலும் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளான்

தனது தாத்தா மற்றும் பாட்டியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு துப்பாக்கியுடன் அங்குமிங்கும் அலைந்து திரிந்த அவன் பள்ளிக்கூடத்துக்குள் நுழைந்து மீண்டும் தாக்குதல் நடத்தி இருக்கிறான்.

அமெரிக்காவில் பள்ளிக்கூட மாணவர்கள் துப்பாக்கியுடன் வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சக மாணவர்களுடன் தகராறு ஏற்படும் போது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும் சம்பவங்களும் அடிக்கடி நடைபெற்று வருகின்றது.

### ஜகார்த்தாவில் கைகலப்பு

இந்தோனேசியாவில் பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள நாடாளு மன்றத்திற்கு பேரணியாகச் சென்ற மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

பொலிசார் மேற்கொண்ட தடியடிப் பிரயோகத்தில் மாணவர்கள் பலர் காயமடைந்ததால் அங்குபரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் பொலிசார் மீதும் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளது.

# இந்தியாவில் விமான சேவையை விஸ்தரிக்க ஓமான் நிறுவனம் முடிவு

(டுபாய்)

ஐதராபாத்துக்கு புதிதாக விமான சேவையை நடத்த ஓமான் விமானப் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.


இந்தியாவில் மும்பை, சென்னை, கொச்சி மற்றும் திருவனந்தபுரத்துக்கு ஓமான் விமானப் போக்குவரத்துக் கழகம் விமான சேவைகளை நடத்தி வருகிறது. இந்தியாவில் தனது சேவையை அதிகரிக்க இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது. டில்லி, ஐதராபாத்துக்குப் புதிதாக விமான சேவைகளை நடத்த முடிவு செய்துள்ளது. மும்பை, கொச்சி பாதைகளில் இருக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தவும் முடிவு செய்துள்ளது. ஓமான் விமானப் போக்குவரத்துக் கழகத் தலைவர் பின்ஹும்தூன் அல் ஹார்த்தியும், தலைமை நிர்வாக அதிகாரி அப்துர் ரஹுமானும் டுபாயில் இத்தகவலை தெரிவித்தனர்.

# 14.03.2005--20.03.2005





**14.**

* பெண்கள் மீதான இராணுவ வன்முறைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.




* நீர்வேலிப் பகுதியில் மூதாட்டி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக் குட்படுத்த முயற்சி செய்த சிறிலங்கா இராணுவச் சிப்பாய் அடையாளம் காணப்பட்டார்.

* மட்டக்களப்பு அரசியல்துறைச் செயலகம் மீது கைக்குண்டு வீச்சு.



* திருமலையில் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கதவடைப்புப் போராட்டம் இடம்பெற்றது.



* யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்தின் இறுதியாண்டு சத்திர சிகிச்சை கற்கை நெறியை ஆரம்பிக்கக் கோரி மருத்துவ பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



* சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச உதவிகள் பகிர்வது தொடர்பில் நோர்வே தெரிவித்த யோசனைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து பதில் கிடைக்காமையால் முழுமையான இணக்கப்பாட்டிற்கு வரமுடி யாதுள்ளதென தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு.

* நல்லாயன் சபையின் நிதி யுதவியில் முல்லைத்தீவில் 15 படகுகள், வலைகள் பாதிக்கப்பட்டோருக்கு கையளிப்பு..

**15.**

* பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தப் பிரதேசத்திலுள்ள ஹரபொல கிராமத்தில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இளைஞர்கள் பலி.

* சேனைக்குடியிருப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டி முடிக்கப்பட்ட தற்காலிகக் குடியிருப்புக்கள் கையளிப்பு.



* ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ். விஜயம்

* அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் சுவீடன் அபிவிருத்தித் துறை அமைச்சர் கரிம் ஜம்மரினைச் சந்தித்து அரசுடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளதால் ஆகக் கூடுதலான விட்டுக் கொடுப்புக்களுடன் பொதுக் கட்டமைப்பிற்கு தயாராகியுள்ளோம் எனத் தெரிவிப்பு.



* கனேடிய பாராளுமன்ற [illegible]ப்பினர்கள் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கனுடன் சந்திப்பு. இதன் போது சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசு பலத்த முட்டுக்கட்டை போடுகிறது எனத் தெரிவிப்பு.



* புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் சுவீடன் தலைநகரிலிருந்து ஜேர்மனியின் தலைநகருக்குச் சென்றனர்.

* கல்முனை மருதமுனையில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி.

* குடாநாட்டில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் புலிகளிடம் சரணடைந்தார்.

* வெலிக்கந்தைப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

* சவூதி அரேபிய இளவரசர் அல்வலீத் பின் அப்துல் அஸீஸ் சிறி லங்காவிற்கு




விஜயம் செய்து சனா திபதியுடன் சந்திப்பு.

**17.**

* மாதகல் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மீதான சிறிலங்கா கடற்படையினரது தாக்குதலைக் கண்டித்து இராணுவ முகாம் முன்பாக அப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

* கிராண்பாஸ் நவகம்புர பகுதி[illegible] வீட்டிலிருந்த தமிழ்ப் பெண் கழு[illegible] நெரித்துக் கொலை.


* விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் ஜேர்மன் அரச தரப்பினரைச் சந்தித்தனர். இதன் பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்:- சமாதானப் பேச்சு வார்த்தைகள் நிர்க்கதியானதொரு நிலைக்கு வந்துள்ளதெனத் தெரிவிப்பு.



* பல்கலைக்கழகங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



* கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் குழுவினர் திருமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் குழுத் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்து கலந்துரையாடினர்.



**18.**

* யாழ். வலி-வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கக் கோரி பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



* ஜாஎல கட்டுகமப் பகுதியில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த ஒருவர் பலி.

* ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழ முடியும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இல்லையென ஐ.நா.சபையின் 61ஆவது ம.உ தொடர்பான கலந்துரையாடலில் ம.வி.உ. சர்வதேச நிலையப் பொதுச் செயலாளர் வெரீனா விராப் தெரிவிப்பு.

* விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி ஹார்வே ஜேன்ஜின்னைச் சந்தித்துப் பேசினர்.



* ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள புலிகளின் அரசியல் குழுவினர் விஜயத்தில் ஒரு கட்டமாக சுவிற்சர்லாந்து விஜயம்.




**19.**

* அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்" என்ற நூலின் அறிமுக விழா யாழ். கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.




* தியாக தீபம் [illegible]ன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நி[illegible]வு தின ஆரம்ப நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிப்பு.



* "புதுநானூற்றின் பரணி" என்ற நூல் கனடாவில் வெளியிடப்பட்டது.



* மன்னார் மாவட்டம் சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதலின் 14ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு சிலாவத்துறை பொது மைதானத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

**20.**

* பிரான்ஸ் தனது கப்பல் ஒன்றை சிறிலங்காவிற்கு வழங்கியது.

* சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ லண்டன் விஜயம்.

# ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்க சனாதிபதி சந்திரிகாவின் தெரிவு?

**இலங்கை** நோக்கி பருந்துகளும், வெளவால்களும், கோட்டாண்களும் என வேறு பல பறவைகளும் வந்து கொண்டிருக்கின்றன. இலங்கைக்குள் சிரமமோ, ஆபத்தோ இன்றி இலகுவாகப் புகுந்து கொள்ளலாம். நெருக்கடியின்றி உணவும், உறையுளும் கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டெனவும் அவை நம்புகின்றன. அதாவது இலங்கைக்குள் குடிகொள்ள பெரும்வாய்ப்புள்ளது என அவை கருதுகின்றன.

இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வொன்று காணப்படும் என அரசாங்கத் தரப்பு கூறிக் கொள்கின்றபோதும், அரசின் கவனம் பெரும்பாலும் இராணுவத் தீர்வை முனைப்புப் படுத்துவதாகவே உள்ளது. இதேவேளை, அரசியல்தீர்வு என்ற விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசிற்குப் பெரும் சவால்கள் காத்துள்ளன என்பதும் வெளிப்படையானதொன்றே.

யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்த மூன்றாண்டு காலப் பகுதியில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் காணப்பட்ட

என்றே கூறலாம். இதன் வெளிப்படாகவே அமெரிக்க பசுபிக் பிராந்திய கடற்படைத் தளபதி பல தடவை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்ததோடு, சிறிலங்கா கடற்படைத் தளபதியும் அமெரிக்கப் பசுபிக் பிராந்தியக் கடற்படை கட்டளைத் தலைமையகத்திற்கும் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்க-சிறிலங்கா இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு அதிகரிக்கப்பட்டிருந்த போதும் சிறிலங்கா அரசின் முக்கிய தெரிவாக பிராந்திய வல்லரசான இந்தியாவே இருந்தது. இதன் காரணமாக இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கும், இந்தியக் கடற்படையுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்கும் சிறிலங்கா அரச தரப்பு விரும்பியது.

இவ்வாறாக, இந்தியாவை சிறிலங்கா தெரிவு செய்தமைக்கு இப்பிராந்தியத்தில் இந்தியா பலம் பொருந்திய பிராந்திய சக்தியாக இருப்பது மட்டும் காரணமல்ல. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயத்தில் மேற்குலகத்தைச் சார்ந்தவர்களைவிட இந்தியா


சனாதிபதி சந்திரிகாவும், பாக்.விமானப்படைத் தளபதியும்

வழங்கிய ஒத்துழைபபிலிருந்தும், தற்பொழுது இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களும் ஒரு பெரிய ளவிலான பாய்மரக்கப்பலும் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரம் இட்டுள்ளதிலிருந்தும் புரிந்துகொள்ள முடியும்.

இதேவேளை, பாகிஸ்தான் அரசுடனும் சிறிலங்கா அரசு தனது நெருக்கத்தை வெளிப்படுத்தியதோடு, பாகிஸ்தானிடம் இருந்து ஆயுத தளபாடக் கொள்வனவை மேற்கொள்ளவும் சிறிலங்கா அரசு அக்கறைகாட்டியது. இதன் ஓர் அங்கமாக 200 கோடி ரூபா ஆயுதங்களை நீண்ட காலக் கடன் அடிப்படையில் வழங்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

பாகிஸ்தானைப் பொறுத்து இலங்கைக்கு ஆயுதம் வழங்குதல் என்பதைவிட இப்பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்குக்கு ஈடாக தன்னை வளர்த்துக் கொள்ளுதலே நோக்கமாகும். இதன் பிரகாரம் இலங்கை இனப்பிரச்சினையில் பாகிஸ்தானும் பங்குதாரராக வேண்டும் என்பது அதன் அபிலாசையாகும்.

இந்நிலையில்,பாக்.அரசு சிறிலங்கா விமானப் படைக்கு ஒத்துழைப்பு வழங்க முன் வந்துள்ளது. அதிலும் தற்பொழுது விடுதலைப்புலிகளின் விமானங்கள் குறித்து சர்ச்சை எழுந்துள்ள நிலையில் பாகிஸ்தான் சிறிலங்கா விமானப் படையை நவீனப்படுத்தும் வகையில் போர்த்தளபாடங்களையும், நவீன ராடர் சாதனங்களையும் வழங்க முன்வந்துள்ளது.

பாகிஸ்தானின் இவ் உதவியானது தனிப்பட்ட ரீதியிலானதாகக் கொள்வதிலும் சிறிது சந்தேகமுண்டு. அதாவது, பாகிஸ்தானின் நட்பு நாடான சீனா இலங்கை விவகாரத்தில் நேரடியாக தொடர்பை வெளிப்படுத்த முனையாதுவிட்டாலும் பாகிஸ்தானுக்கு ஊடாக தனது செயற்பாட்டை மேற்கொள்ள சீனா விரும்பியிருத்தல் கூடும்.

ஆனால், எது எப்படியோ தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வளர்ச்சியை பாகிஸ்தான் அரசு விரும்பியதில்லை. ஆகையினால், இந்தியாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் இலங்கை

முன்னேற்றத்தைவிடச் சிறிலங்கா அரசு தனது இராணுவத்தை நவீனப்படுத்துவதிலும், வளப்படுத்துவதிலும் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. இக்காலப்பகுதியில் சிறிலங்காவின் முப்படைகளின் பல்வேறு பிரிவுகளிலும் (ஆளணி தவிர்ந்த) இரண்டு மூன்று மடங்கிற்கு மேற்பட்டதான வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளன.

சமாதான காலத்தில் ஆயுதப் படையை வளப்படுத்தும் நோக்கில் சிறிலங்கா அரசு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டமை வெளிப்படையானது. இவ்விடயத்தில் சர்வதேச நாடுகளின் - குறிப்பாக இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தில் அக்கறை கொண்ட உலக, பிராந்திய வல்லாதிக்க சக்திகளின் இராணுவ ரீதியிலான உதவிகளையும், தகவல் பரிமாற்றம் தொடர்பில் ஒத்துழைப்பையும் பெறுவதில் சிறிலங்கா அரசு அக்கறை கொண்டிருந்தது.

இதேவேளை, பூகோள ரீதியிலான தனது நலன், பாதுகாப்பு என்பனவற்றில் அக்கறை கொண்டுள்ள உலகின் முன்னணி வல்லரசான அமெரிக்காவினாலும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் உணரப்பட்டதாகவே இருந்தது. தென்மேற்கு ஆசியாவில் ஈராக், ஆப்கான் பகுதிகளில் தனது படைகளை நிலைகொள்ள வைத்துள்ள நிலையிலும், இந்து சமுத்திர கடல்வழிப் போக்குவரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைப் போக்கவும், பாதுகாப்பு வழங்கவும் இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் அக்கறை அதிகப்படியானதாகவே இருந்தது.

இந்நிலையில், சிறிலங்கா அரசு எதிர்பார்த்திருந்த இராணுவ உதவிகளை வழங்குவதன் மூலம் சிறிலங்காவில் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள அமெரிக்கா முற்பட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. இதன் வெளிப்படாகவே சிறிலங்கா கடற்படைக்கு கடலோர ரோந்துக் கப்பல் அன்பளிப்பும், மலிவு விலையில் ஆயுதம் பெறுவதற்கான அனுமதியும் அமெரிக்காவால் வழங்கப்பட்டவையாயின.

அதிலும், குறிப்பாக, அமெரிக்கக் கடற்படையுடனான பிணைப்பு வலுப்படுத்தப்பட்டது

சிறிலங்கா அரசிற்கு அனுகூலமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையேயாகும். அதாவது சமஷ்டி முறையிலான ஆட்சி என்ற வகையில் கூட இந்தியாவிற்கும், மேற்குலகத்தவர்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு.

இதனைத் தவிர இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் அனுசரணை பெறப்படுதல் வேண்டும் என்ற நிலைப்பாடு இருக்கையில்; இந்தியாவுடன் அரசியல் இராஜதந்திர-இராணுவ ரீதியலான நெருக்கத்தை வைத்துக்கொள்வதன் மூலம் பயனடையலாமென சிறிலங்கா ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்து பிராந்திய வல்லரசு என்ற ரீதியில் இலங்கையின் அரசியலில் செல்வாக்குச் செலுத்த முடியுமாயினும் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவால் எத்தகைய பாத்திரத்தை வகிக்க முடியும் என்ற கேள்வி பலமாகவே உள்ளது. ஏனெனில், முற்று முழுதாக சிறிலங்கா அரசின் விருப்பிற்கு ஏற்ப இந்திய அரசினால் செயற்படத்தக்கதான நிலை இல்லை என்றே கூறலாம்.


இந்தியப் பாரிய பாய்மரப்படகு

ஏனெனில், இந்தியாவின் உள்நாட்டு அரசியல் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே உள்ளது. அதாவது, தென்இந்தியாவின் குறிப்பாக, தமிழகத்தின் உணர்வுகளை மதிக்காது செயலாற்ற இந்திய மத்தியரசால் முடியாததொரு நிலையே நிலவுகின்றது.

இருப்பினும், சிறிலங்கா கடற்படைக்கும், இந்தியக் கடற்படைக்கும் இடையிலான உறவில் குறிப்பிட்டத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்கான சமிக்ஞைகள் தெரியவே செய்கின்றன. இதனைச் சுனாமி அனர்த்தத்தை அடுத்து சிறிலங்கா கடற்படைத் துறைமுகங்களை மீள் ஒழுங்கு செய்வதற்கு இந்திய கடற்படை

விவகாரத்தில் முனைப்புக்காட்ட முனைகின்றதெனலாம்.

இந்த வகையில், சிறிலங்கா அரசு யுத்த நிறுத்த காலத்தில் தனது ஆயுதப் படையை வலுப்படுத்த மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடம் இருந்து குறிப்பிடத்தக்கதான உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆனால், யுத்த நிறுத்த காலத்தில் தனது ஆயுதப் படையின் பலத்தையும், ஒத்துழைப்பையும் பெருக்கிக் கொண்ட அளவிற்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் எதையும் எட்டியதாக இல்லை. வேறுவிதமாகக் கூறுவ தானால், சமாதான முயற்சிகளில் அவர்கள் பேச்சளவில் காட்டிய அக்கறையை நடைமுறை யில் காட்டவில்லை எனலாம்.

இத்தகைய நிலைக்கு சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆளும் கூட்டணிக் கட்சிக்குள் இடையே இருந்த முரண்பாடு, சமாதானத்தைவிட யுத்தம் ஆட்சியாளருக்கு இலகுவானதாகவும், தேவையானதாகவும் இருந்தமை காரணமாகலாம்.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி க்கும் இடையில் தேர்தலின் முன் ஏற்பட்ட உடன்பாட்டில் கூட இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இணக்கப்பாடானதொரு நிலை ஏற்படவில்லை. இவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரும் இந்நிலையே தொடர்ந்தமையால் சமாதான முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டதாகியது.

இதேவேளை, இக்கூட்டணியின் முக்கிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, சனாதிபதி சந்திரிகாவும் சரி இனப்பிரச்சினை தொடர்பான ஜே.வி.பி யுடனான கூட்டறிக்கையில், தமது நிலைப்பாடு எனத் தெரிவித்த விடயங்களில்கூட முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதாவது, அவ்விடயத்தில் அவர்கள் அக்கறை காட்டவில்லை.

அவ்வாறு அவர்கள் அக்கறை காட்டாமைக்கு தனியாக ஆளும் கூட்டணிக்குள் இருந்த முரண்பாடுதான் காரணம் என்பதல்ல. சமாதானத்தைவிட யுத்தம் இலகுவானது; தமது தேவைகளை நிறைவு செய்ய வாய்ப்பானது என்ற சிந்தனை ஆட்சியாளர்களிடம் காணப்பட்டதும் காரணமாகும்.

அதாவது, சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து இன்று சமாதானம் என்பதைவிட ஆட்சி அதிகாரத்தில் நீடிப்பது என்பதே முக்கியமான விடயமாகும் - அவரின் தற்போதைய சிந்தனையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சமாதானப் பேச்சுவார்த்தை என்பனவெல்லாம் அவசரமானதாகவோ அவசியமானதாகவோ படுவதாக இல்லை. ஆட்சி அதிகாரத்தில் நீடிப்பதற்கான வழிமுறையே அவருக்கு முக்கியமானதாகும்.

இதில், அரசியல் யாப்பின் ஊடாகவோ, அதாவது மாற்றி அமைத்தல் மூலம் - அன்றி வேறு சனநாயக வழிமுறையிலான முறையிலோ நீடிப்புச் செய்வதென்பது சாத்தியப்பாடானதொன்றானதாக இல்லை. தற்போதைய சூழ்நிலையில், சனாதிபதி பதவி நீடிப்பு அன்றி ஆட்சிமுறை மாற்றம் குறித்த ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது பற்றி சனாதிபதி சந்திரிகா சிந்தித்து வருவதாகத் தெரிகின்றது.

ஆனால், இது அரசியல் யாப்பிற்கு உட்பட்டதா? அவ்வாறு உட்பட்டதாயினும் அதில் சனாதிபதி சந்திரிகாவினால் வெற்றி பெற முடியுமா? என்பவை முக்கிய வினாக்களாகவே உள்ளன. ஏனெனில், சனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளும் முயற்சி பெரும்பாலும் அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாக அமையாது என்றே பலராலும் கருதப்பட்டாலும், அதனைப் பிரதம நீதியரசரின் துணையுடன் சனாதிபதி சந்திரிகாவால் வெற்றி கொண்டுவிட முடியும் எனக்கூறும் விமர்சனங்களும் உண்டு.

ஆனால், சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி பெற அவரின் சுதந்திரக் கட்சிக்குள் ஒற்றுமையின்மை, ஜே.வி.பி.யின் ஆதரவு என்பவற்றிற்கும் அப்பால் ஒரு தொகுதி சிறுபான்மை மக்களினது ஆதரவும் அவருக்கு அவசியம் தேவைப்படுவதாக இருக்கும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமாகுமா?

இந்நிலையில், தனது ஆட்சி அதிகாரத்தை நீடிப்பதற்கான சனாதிபதி சந்திரிகாவின் தெரிவு யுத்தமாக இருந்தாலும், ஆச்சரியப்படுவதற்கு இல்லை. யுத்தம் பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் ஆதரவை சனாதிபதி சந்திரிகாவிற்குப் பெற்றுக்கொடுப்பதோடு, யுத்தத்திற்கு அடிப்படையாக அமையும் அவசரகாலச் சட்டம் எதிர்க்கட்சிகள் மீதான ஒடுக்குமுறைக்கும், சிறுபான்மை இனங்களைத் தேர்தலில் இருந்து ஓரம் தள்ளி வைப்பதற்கும் உதவக் கூடியதாகும்.

ஆகையினால், சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவத்திற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் அரசாங்கம் இணக்கப்பாடானதொரு நிலைப்பாட்டிற்கு வரத் தயாராகி வருகின்றதென்ற தகவல்கள் வெளிவருகின்றபோதும் இப்பொதுக் கட்டமைப்பிற்கு பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளுடன் இணைந்து ஆட்சியின் பங்குதாரர்கள் காட்டிவரும் எதிர்ப்பு சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை, விடுதலைப்புலிகளிடம் விமானங்கள் இருப்பதான அரசின் பிரச்சாரங்கள் என்பன அரசாங்கம் சமாதானத்திற்கான பாதையில் முன்னேறுவதைவிட யுத்தத்திற்கான பாதையில் முன்னேற தயார்ப்படுத்தப்பட்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாயுள்ளது.

**ஜெயராஜ்**

சிவமயம்





“நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக”

எதிர்வரும் 25.03.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப் பொங்கல் நடைபெறவுள்ளது

இவ்விழாவை முன்னிட்டு

கரைச்சிபுளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை

ஆண்டுக்கணக்கறிக்கை-காசுத்திரட்டு

| வரவுகள் | | செலவுகள் | | |
|---|---|---|---|---|
| | | பூசைப்பொருள் | | 921150-98 |
| ஆரம்பக்கையிருப்பு | 204510-25 | திருப்பணி நிர்மாணம் | 1883501.00 | |
| முற்பணம் அறவு | 325000.00 | தளபாடம் | 12054.00 | |
| கிராமிய வங்கி வரவு | 1217000.00 | ஆபரணம் | 35750.00 | |
| ஆபரண நன்கொடை | 35750.00 | உபகரணம் | | 30718.50 |
| நெய்வேத்திய வரவு | 516547.00 | மேசன்முற்பணம் | | 415000.00 |
| அர்ச்சனை பொ.விற்.வரவு | 359580.00 | கிராமிய வங்கி சேமம் | | 1100 000.00 |
| கால்நடைவிற்பனை | 790095.00 | வேதனங்கள் | | 371590.00 |
| கரைச்சி வ.ப.நோ.கூ.ச வரவு | 150000.00 | தட்சணைகள் | | 114869.00 |
| திருப்பணி நன்கொடை | 878077.00 | உணவுப்பொருள் | | 93662-45 |
| அர்ச்சனை பற்றுச்சீட்டு விற்பனை | 190605.00 | எரிபொருள் | | 90464.25 |
| நில வாடகை வரவு | 319185.00 | பட்டுவகை | | 56312.00 |
| காவடி நேர்த்தி வரவு | 40450.00 | மேளவாத்தியம் | | 99750.00 |
| உண்டியல் வரவு | 93670.00 | கரை.வட.சங்.மீளளிப்பு | | 150000.00 |
| வேளை விபூதி வரவு | 449047.00 | கூலிகள் | | 225986.00 |
| திருவிழாப் படித்தள வரவு | 170150.00 | ஒலி,ஒளி அமைப்பு | 87950.00 | |
| கொப்பறா விற்பனை | 16500.00 | அச்சுப்பிரதி | | 39014.00 |
| பால்செம்பு வரவு | 11150.00 | விளம்பரம் | | 43100.00 |
| காவடி வாடகை வரவு | 16050.00 | காகிதாதி | 4600.00 | |
| பூசைப்பொருள் விற்பனை | 188015.00 | உபசரணை | | 20765.00 |
| நாணாவித வரவு | 61469.00 | பராமரிப்பு | 18200.00 | |
| | | நன்கொடை | | 11447.00 |
| | | நாணாவித செலவு | | 97292.15 |
| | | இறுதிக்கையிருப்பு | | 109673.92 |
| | 6032850.25 | | | 6032850.25 |

நான் அறிந்த மட்டிலும், எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களின் படியும் ஆலயப் புத்தகங்கள், ஏடுகள், தஸ்தாவேஸ்களின் படியும், மேற்படி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தினது 2004 ஆம் ஆண்டிற்கான காசுத்திரட்டு சரியாக வகுக்கப்பட்டுள்ளது என அபிப்பிராயப்படுத்துகின்றேன்.

கிளிநொச்சி,
15.02.2005

மா.குலவீரசிங்கம்
கணக்காய்வாளர்.

பிரதான குறிப்பு:-

11.02.2005 ஆம் திகதி ஆலய முன்றலில் நடைபெற்ற ஆண்டுற்சவப் பொங்கல் ஆலோசனைக் கூட்டத்தில் எம்மால் சமர்ப்பிக்கப்பட் கணக்கறிக்கையில் அச்சுக்கூடத்தினால் சில தவறுகள் ஏற்பட்டுள்ளது. அதனை இவ்வறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கணக்கறிக்கையை எதிர்வரும் 25.03.2005 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆண்டுற்சவப் பொங்கல் தினத்திற்கு முன்பே சகலருக்கும் கிடைக்கவேண்டுமென்ற தீர்மானத்திற்கமைய இதனைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைவதுடன் சகலரினதும் அபிப்பிராயங்களையும்-அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபையினர்,
புளியம்பொக்கணை.

(சி.11607)



90 ஆம் நாள் நினைவஞ்சலி...







மலர்வு 10 04 1941

இராசமாணிக்கம் - தங்கலட்சுமி

அலை இழந்த கடல்களின் துயரம்
காடுகளற்ற நாடுகளின் துயரம்
இதழ்களற்ற பூக்களின் துயரம்
விழுதுகளும், வேர்களுமற்ற மரங்களின் துயரம்.
இதையெல்லாம் விஞ்சியது எங்களின் துயரம்.

மலர்வு 22 03 1957

மறைவு 26 12 2004

வடிவேல் - கதிரமலைராசா

இயற்கை எனும் எமனே
உனக்கு இரக்கம் என்பது இல்லையா
ஓ...... பொங்கி வந்த அலையே! ஏன்
கொன்று விட்டாய் எம்உறவை

மலர்வு 05 04 1940

வடிவேல் - மீனாட்சி

ஆர்ப்பரித்து வந்த ஆழிப் பேரலையில்
வீழ்ந்து போன எம் உறவுகளே
உங்கள் முகம் எங்கே! உங்கள்
குரல் எங்கே! தேடித்தேடி விழிநீர்
சொரிகிறோம் இனி எப்போ - காண்போம்.

இவ் அனர்த்தத்தின்போது எம் உயிர் உறவுகளை நாம் இழந்து நின்றபோது எம்மோடு தோளோடு தோள் நின்று உதவியவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்க்கும், தொலைபேசி மூலம் மற்றும் கடிதம் மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.03.2005 (நாளை மறுதினம்)அன்று நடைபெறும். அதிலும் அன்று நடக்கும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நிரந்தர முகவரி:-
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.

தற்காலிக முகவரி:-
4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

பிரிவால் துயருறும்.
கணவன், மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

(5902)

### வறுமை, கல்லாமை, வேலையின்மை என்பவற்றிலிருந்து

# இந்தியாவை விடுவிக்க வளர்ச்சி சார்ந்த அரசியலையுடைய இயக்கம் தேவை!

## -விருது வழங்கும் நிகழ்வில் கலாநிதி அப்துல்கலாம்

வறுமை, கல்லாமை, வேலையின்மை ஆகியவற்றிலிருந்து இந்தியாவை விடுவிப்பதற்கு ஓர் வளர்ச்சி சார்ந்த அரசியலைக் கொண்ட இயக்கம் தேவையாகவுள்ளது. இதற்கு அரசியல் கட்சிகளிடையே ஆரோக்கியமான போட்டி நிலவுவது வழமையானதும், தேவையானதுமாகும் என இந்திய சனாதிபதி அப்துலகலாம் தெரிவித்துள்ளார். பிரதமர் மன் மோகன சிங், எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருது வழங்கி பேசுகையிலேயே சனாதிபதி அப்துல்கலாம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் பேசுகையில், ஆட்சி அமைப்பதற்கு எண்ணிக்கையைக் கூட்டிக்காட்டுவதற்காக, பேரவை உறுப்பினர்களைப் பேரம் பேசி இழுத்தல் போன்ற சனநாயகத்துக்கு விரோதமாக பின்பற்றப்படுகின்ற வஞ்சக வழிகளால் நமது சனநாயக அமைப்பின் மீதே மக்களுக்கு சந்தேகம் ஏற்படுகின்றது. அரசியல் சேவை என்பது அரசியல் சாகசமாக தரம் தாழ்ந்திக் கொள்ளும் போது தேசம் பேரழிவுப்பாதையை நோக்கித் தள்ளப்படும். அந்த ஆபத்து ஏற்பட நாம் அனுமதிக்கக்கூடாது. நாம் அனைவரும் ஆத்ம பரிசோதனை செய்து கொள்வதற்கு இதுவே உரிய தருணம். சிக்கலான பழைய சட்டங்களை, நிர்வாக நடைமுறைகளைக் கண்டறிந்து நீக்குவதற்கு மக்களவை ஓர் இயக்கத்தைத் தொடங்கவேண்டும். அது மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும். நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பினூடாக இந்தியா முன்னேற வேண்டும். அந்த மாற றத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் செய்ய முடியும். அரசியல் சார்ந்த அரசியல் என்பது வேறு. வளர்ச்சி சார்ந்த அரசியல் என்பது வேறு. முதல்வகை அரசியல் சுதந்திரப் போராட்ட காலத்தில் நமக்குத் தேவைப்பட்டது.

ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒரு வளர்ச்சித் திட்டம் என்ற அடிப்படையில் 15 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக்குவோம் என்று ஒரு கட்சி அறிவிக்கக் கூடும். இன்னொரு கட்சி இன்னும் குறுகிய காலத்தில் அதை நிறைவேற்றுவோம் என்று கூறலாம். அனைத்து எல்லைத்தகராறுகளும் பத்து ஆண்டுகளில் தீர்க்கப்படும் என்று ஒரு கட்சி கூறும். இன்னொரு கட்சி ஐந்து ஆண்டுகளில் அண்டை நாடுகளுடன் இணக்கமான உறவை உருவாக்குவோம் என்று குறிப்பிடும். வளர்ச்சி சார்ந்த அரசியலில் இப்படித்தான் ஆரோக்கியமான போட்டி இருக்கும் என சனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.




இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், லோக்சபாவின் சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி ஆகியோர்களுக்கு சிறந்த நாடாளுமன்ற வாதி விருதை சனாதிபதி அப்துல்கலாம் வழங்கி வைக்கின்றார்.

# பிரபல நடிகர் ஜெமினி கணேசன் மரணம்!

(சென்னை)

தமிழ்த் திரையுலகின் பிரபல நடிகர் ஜெமினி கணேசன் தனது 84ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.



காலஞ்சென்றவர்களான எம்.ஜி. ஆர்., சிவாஜிகணேசன் ஆகிய இருவரும் தமிழ்த் திரையுலகில் பிர பலமடைந்திருந்த காலத்தில் நடிகர் ஜெமினி கணேசனும் தனக்கென ஓர் தனியிடத்தைப் பிடித்திருந்தார். 1947 ஆம் ஆண்டு சினிமாவில் நடிக்கத் தொடங்கிய இவர், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

நேற்று அதிகாலை 1.10 மணியளவில் திடீரென கடுமையான மூச்சுத்திணறலுக்கு உள்ளாகிய ஜெமினி கணேசன் சில நிமிடங்களில் உயிரிழந்தார். இவரது வீட்டிலேயே உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி மற்றும் பிரபல திரையுலக நடிகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தியுள்ளனர். இவர் தமிழ்த் திரையுலகின் "காதல் மன்னன்" என அக்காலத்தில் அழைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# லோக்சபாவில் பின் வரிசையில் அமர்ந்த சோனியா காந்தி

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவி சோனியா நேற்று முன்தினம் லோக்சபாவில் பின் வரிசையில் அமர்ந்து அனைவருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளார்.

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவி, இக் கூட்டணியின் குறைந்த பட்ச பொதுச் செயல் திட்டத்தின் தேசிய ஆலோசனைக் குழுவின் தலைவி அத்துடன் அரசாங்க அந்தஸ்து பெற்ற பெரிய பதவிகளில் இருக்கின்ற சோனியா காந்தி லோக்சபாவிலே அவருக்கென முன் இருக்கைகள் இருக்கின்ற போதும் அவர் தனக்குரிய இருக்கையில் அமராது நாடாளுமன்றின் பின் வரிசையிலே அமர்ந்திருந்து அவை நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தார். இதனை அவதானித்த கட்சியின் உயர் அதிகாரிகள் அவரிடம் சென்று முன் இருக்கையில் அமரும் படி அழைத்த போதும் அவர் புன்னகைத்தவாறு தொடர்ந்தும் பின் வரிசையில் இருந்தவாறே அவை நடவடிக்கைகளைக் கவனித்தார். திருமதி சோனியாகாந்தி லோக்சபாவுக்கான பொதுத் தேர்தலிலே தமது காங்கிரஸ் கட்சி வென்று ஆளும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட போது பிரதமராக பதவியேற்பார் என எதிர்பார்த்த வேளை அவர் தனது பதவியை கலாநிதி மன்மோகன்சிங்கிடம் கொடுத்து விட்டுத் தொடர்ந்தும் கட்சித் தலைவியாகவே இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றிய மேலும் சிலருக்கு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கு 2002ஆம் ஆண்டு தோற்றிய மேலும் சிலரை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கான கடிதங்களை வழங்கவுள்ளதாக ஒன்றிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

அரச சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் 2002ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டாம் தரக் குழுவில் 1200 பேர் அழைக்கப்பட்டிருந்த போதிலும் 570 பேர் மாத்திரமே நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டதாகவும் இது எதிர்பார்க்கப்படாத ஒன்றெனவும் அவர் கூறியுள்ளார்.

இதனாலேயே 2002 ஆம் ஆண்டு எழுதுநர் போட்டிப் பரீட்சையில் தோற்றிய மேலும் சிலருக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதே·வேளை அரச சேவையில் நிலவும் வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை குறித்து இதுவரை இறுதியாக கணக்கிடப்படவில்லையெனவும் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

# காணவில்லை



**செல்வராசா பிரியந்தன் (சுவிந்தன்)**
**செல்வபுரம் முல்லைத்தீவு**

கடந்த 26.12.2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரலை காரணமாக குழந்தையொன்று காணாமல் போயுள்ளார். செல்வராசா பிரியந்தன் (சுவிந்தன் வயது06) செல்வபுரம் அந்தோனியார் கோவிலடியில் வசித்து வந்தவர் தற்போது காணாமல் போயுள்ளார். இவரைக் கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
ஜெ.செல்வராசா
செல்வபுரம் முகாம்,
வட்டுவாகல்,
முல்லைத்தீவு.

(5874)

தகவல்:-
தாய் மனோன்மணி


# இல்லறத்தில் இணையும் நல் உறவுகள் பல்லாண்டு வாழ சொல்லாலே ஓர் வாழ்த்து!



மணமகன்
**கேதீஸ்வரன்**



மணமகள்
**சசிந்தா**

23.03.2005 புதன்கிழமை
இந்நாளாம் நன்னாளாம்
பொன்னாளினிலே சென்னை
உருத்திரபுரீசுவரன் அம்பிகா மண்டபத்தில் இருமனம்
ஒருமனதாய் இணையும்
திருமண பந்தத்திலே சங்கமிக்கும்
எங்கள் அரசாங்க அதிபரின்
உத்தம புத்திரியே சசிந்தா - உனை
மாலையிடும் காளையாம் கேதீஸ்வரனுடன்
கோடிக் காலங்கள் பாடித்திரியும் பட்டாம் பூச்சிகளாய்
சோடி பிரியாது நீடூழி வாழ்கவென - உங்களை
நாடி வந்து வாழ்த்த முடியாத
பளைப்பிரதேச செயலகத்து உறவுகள்
தங்கத் தமிழிலே தேடி எடுத்த வாழ்த்துக்களால்
வாழ்த்துகின்றோம் ஓர் வாழ்த்து
வாழ்க வாழ்கவே! நீங்கள் பல்லாண்டு வாழ்கவே!

பிரதேச செயலகம்
பச்சிலைப்பள்ளி,
பளை.

(5873)

உதவி பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.

# மழை: நியூசிலாந்தைக் காப்பாற்றியது அவுஸ்திரேலியாவை ஏமாற்றியது



நியூசிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் வெற்றி,தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

அவுஸ்திரேலியா -முதல் இன்னிங்சில் எட்டு விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டம் குவித்து ஆட்டத்தை நிறுத்தியது நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 244 ஓட்டம் எடுத்து நேற்று கடைசி நாள் ஆட்டம் நடந்தது. நியூசிலாந்து "பாலோ ஆன்" ஆகி தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆடியது அந்த அணி மூன்று விக்கெட் இழப்புக்கு 48 ஓட்டம் எடுத்து திணறியபோது ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் கைவிடப்பட்டது.



இதனால் இந்த டெஸ்ட் இரு தரப்புக்கும் வெற்றி-தோல்வியின்றி போட்டிசமமானது. முதல் நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டு இருந்தது. நான்காவது நாள் ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டது நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்து இருக்கவேண்டும். மழையால் இந்த அணி தோல்வியில் இருந்து தப்பியது.

நியூசிலாந்தின் மூன்று விக்கெட்டுகளில் மெக்ராத் இரண்டு விக்கெட்டையும், கஸ்பரோவிச் ஒரு விக்கெட்டையும் எடுத்தனர். இந்த விக்கெட் மூலம் கஸ்பரோவிச் டெஸ்டில் 100 ஆவது விக்கெட்டைத் தொட்டார். இருஅணிகள் இடையேயான மூன்று டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா ஒன்பது விக்கெட்டில் வெற்றி பெற்று இருந்தது. மூன்றாவது டெஸ்ட் வரும் 26ஆம்திகதி ஆக்லாந்தில் தொடங்குகிறது. ஒருநாள் தொடரை ஏற்கனவே அவுஸ்திரேலியா 5-0 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# எனது பந்து வீச்சில் தவறில்லை- ஹர்பஜன்



இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன்சிங். இவரது பந்துவீச்சு முறையில் மீண்டும் சர்ச்சை கிளம்பியுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்டில் ஹர்பஜன்சிங்கின் 'தூஸ்ரா' வகைப் பந்துவீச்சு சர்ச்சையைக் கிளப்பியது. ஐ.சி.சி. நிர்ணயித்த 15 டிகிரி அளவுக்கு மேல் ஹர்பஜன் கை தூக்கி வீசுகிறார் என்று போட்டி நடுவர்கள் புகார் தெரிவித்துள்ளனர். பந்துவீச்சு சர்ச்சையில் அவர் சிக்கிக்கொள்வது மூன்றாவது முறையாகும்.

இதற்கிடையே தனது பந்துவீச்சு செயலில் எந்தத்தவறும் இல்லை என்று ஹர்பஜன்சிங் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஒவ்வொரு ஆட்டத்தின்போதும் எனது பந்து வீச்சுக் குறித்து கேள்வி எழுப்பப்படுகிறது. எனது விடயத்தில் நடந்துகொள்ளும் முறை ஏமாற்றம் அளிக்கிறது. நான் ஏற்கனவே அவுஸ்திரேலியா சென்று நிபுணர்களிடம் எனது பந்துவீச்சுக் குறித்து சோதனை செய்திருக்கிறேன்.

எனது பந்து வீச்சு செயல்முறையில் எந்தவித தவறுமில்லை. கிரிக்கெட்சபை தான் இது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதனால் பெங்களூரில் தொடங்கும் மூன்றாவது டெஸ்டில் ஹர்பஜன்சிங் விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# பெங்களூரில் சிறப்பாக ஆடுவேன் - தினேஷ்கார்த்திக்

கொல்கத்தாவில் ஆடியதுபோல் பெங்களூரிலும் சிறப்பாக ஆடுவேன் என இந்திய அணியின் இளம் விக்கெட் காப்பாளர் தினேஷ்கார்த்திக் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் எடுத்த 93 ஓட்டம் சரியான நேரத்தில் அடிக்கப்பட்டது. மிகுந்த நெருக்கடியில் விளையாடினேன். இதன் மூலம் எனக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பெங்களூரில் நடைபெறும் மூன்றாவது டெஸ்டிலும் என்னால் சிறப்பாக விளையாட முடியும்.ஒரு நாள் போட்டியில் விளையாட வாய்ப்புக் கிடைக்குமா என்பது பற்றிச் சிந்திக்கவில்லை. இந்தத் தொடரில் சிறப்பாக விளையாடுவது தற்போதைய எனது நோக்கம். இவ்வாறு தினேஷ் கார்த்திக் கூறினார்.

# ஒரு நாள் போட்டியைக் காண டில்லி வருகிறார் சனாதிபதி முஷாரப்



இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டியைக்காண பாகிஸ்தான சனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஏப்ரல் 17 ஆம் திகதி டில்லி வருகிறார்.

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இந்தியாவில் பல்வேறு கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டிகளைக் காண பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பிற்கு, பிரதமர் மன்மோகன்சிங் அழைப்பு விடுத்திருந்தார். இதையேற்று அவர் ஏப்ரல் 17 ஆம் திகதி டில்லி வருகிறார்.

இத்தகவலை இஸ்லாமபாத்திலுள்ள வெளியுறவுத்துறை அலுவலக செய்தித் தொடர்பாளர் ஜலீல் அப்பாஸ் செய்தியாளர்களிடம் திங்கட்கிழமை உறுதிப்படுத்தினார்.

# சமீபகாலத்தில் மிகச்சிறந்தது கொல்கத்தா டெஸ்ட் போட்டி

கொல்கத்தா டெஸ்ட்... சமீபகாலங்களில் நடந்த மிகச்சிறந்த போட்டியாக அமைந்துவிட்டது. ஆட்டத்தின் ஒவ்வொரு நாளும் ஒரு புதுத்திருப்பம் இருந்தது.

கடைசி நாள்வரை போட்டி யாருக்கென்ற எதிர்பார்ப்பு இருந்தது. மொகாலியில் செய்த தவறுகளை இந்தியர்கள் இங்கு செய்யவில்லை. போட்டி அவர்கள் கைகளுக்குப் பாதுகாப்பாகச் சென்று விட்டது என பாகிஸ்தான் முன்னாள் தலைவர் வசீம்அக்ரம் தெரிவிக்கிறார்.

இந்தப் போட்டியில் இந்தியா வெற்றிபெறஅனில் கும்ளே, தினேஷ்கார்த்திக், ராகுல்ராவிட் ஆகியோர் பங்கு முக்கியம்.குறிப்பாக இந்திய அணியின் நெடுநாள் தேவையான விக்கெட் கீப்பிங் துடுப்பட்ட வீரர் இடத்துக்கு தன்னைச் சரியான நபராக நிரூபித்து விட்டார் தினேஷ். கிரிக்கெட்டில் இப்போதைக்கு ராகுலை அடித்துக்கொள்ள ஆளில்லை. அவரது ஆட்டம் மிக மிக அருமை.



வசீம் அக்ரம்

அருமையான போட்டியில் ஒரு விரும்பத்தகாத விடயமும் நடந்துவிட்டது. சச்சினுக்கு அம்பயர் ஸ்டீவ் பக்னர் வழங்கிய தவறான தீர்ப்பு... நல்லவேளை, இந்திய அணிக்கு இது பெரிய பாதிப்பெதுவும் ஏற்படுத்தவில்லை. தீர்ப்பு வழங்கும் முன்,விக்கெட் கீப்பர்,ஸ்லிப் பீல்டர்கள் ஆகியோரது முகபாவனைகளை கவனித் திருந்தால் கூட பக்னர் அவுட் கொடுத்திருக்கமாட்டார். என்ன செய்வது. தவறுகளும் கிரிக்கெட்டின் ஒரு பகுதி தானே?

# பெங்களூர் டெஸ்ட் போட்டியில் மேலும் சிறப்பாக பந்து வீசுவேன்



-கும்ளே

"பெங்களூர் டெஸ்ட் போட்டியிலும் சிறப்பாகப்பந்து வீசுவேன்" என்று கும்ளே கூறியுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையேயான மூன்று டெஸ்ட் போட்டித் தொடரில் மொகாலியில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது.

கொல்கத்தாவில் நடந்த இரண்டாவது டெஸ்ட்டில் இந்திய அணி 195 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரண்டாவது இன்னிங்சில் கும்ளே ஏழு விக்கெட்டுகள் வீழ்த்தி அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கினார். அவர் முதல் இன்னிங்சில் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.இந்த நிலையில் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் நாளை தொடங்குகிறது.

இந்தப் போட்டி குறித்து சுழற்பந்து வீச்சாளர் கும்ளே கூறுகையில், "கொல்கத்தா டெஸ்டை விட இந்த டெஸ்டில் சிறப்பாகச் செயற்படுவேன் என்ற நம்பிக்கையுள்ளது." என்றார் "உள்ளூரில் நடைபெறும் போட்டி என்பதால் கூடுதல் நெருக்கடி எதுவும் இல்லை" என்றும் அவர் கூறினார்.

# கொல்கத்தா போட்டி லண்டனுக்கு மாற்றம்

சுனாமி நிவாரணத்துக்காக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) இரண்டு ஒரு நாள் போட்டியை நடந்த முடிவு செய்தது. அதன்படி கடந்த சனவரி மாதம் மெல்பேர்ன் நகரில் முதலாவது போட்டி நடந்தது.

உலக 11 பேர் -ஆசிய 11பேர் மோதிய இந்தப் போட்டியில் பொண்டிங் தலைமையிலான உலக 11பேர் அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டி மூலம் ரூ.50 கோடி நிதி திரண்டது.

சுனாமி நிவாரணத்திற்கான இரண்டாவது ஒருநாள் போட்டி கொல்கத்தா ஈடன்கார்டனில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற இருந்த இந்தப் போட்டி தள்ளி வைக்கப்பட்டது.

இதற்கிடையே கொல்கத்தாவில் நடைபெற இருந்த சுனாமி நிவாரணப் போட்டி லண்டனுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 14 ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெறும்.

இந்தப் போட்டியில் சர்வதேச 11 பேருடன் எம்.சி.சி. 11 பேர் மோதும் லாறா, வோர்ன், முரளிதரன், அண்டிபிளவர் போன்ற முன்னணி வீரர்கள் இதில் விளையாடுவது உறுதியாகிவிட்டது.

இதில் விளையாடும் மற்ற வீரர்கள், தலைவர்கள் விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்தப் போட்டிக்கான டிக்கெட் விற்பனை ஏப்ரல் நான்காம் திகதி தொடங்கும்.




# யாழ். மாவட்ட வி. துறை நடாத்தும் இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விபரம் வருமாறு:

வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அண்ணாவிளையாட்டுக்கழகம் எதிர் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த டயமன்ஸ் விளையாட்டுக் கழகம், வலிகாமம்லீக்கைச்சேர்ந்த ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.லீக்கைச் சேர்ந்த றோயல்விளையாட்டுக் கழகம். (41)

# பெண்களுக்கான வேகநடைப்போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களம் பெண்களுக்கான வேக நடைப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது.


எதிர்வரும் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள இப்பெண்களுக்கான வேக நடைப்போட்டியில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களினதும் வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (10)

# பசுபிக் ஓபன் டென்னிஸ் பட்டம் வென்றார் பெரடர்




பசுபிக் ஓபன்டென்னிஸ் தொடரில் ரோஜர் பெரடர் சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.

இத்தொடர் அமெரிக்காவின் இண்டியன் வெல்ஸ் நகரில் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான சுவிஸ் சர்லாந்தின் பெரடர், இரண்டாம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட்டை எதிர்த்து விளையாடினார். விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் பெரடர் 6-2,6-4,6-4, என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் கைப்பற்றினார். இந்த ஆண்டில் பெரடர் விளையாடிய 43 போட்டிகளில் 42 இல் வெற்றி பெற்றுள்ளார். இவர் தோல்வியடைந்த ஒரே போட்டி ரஷ்யாவின் மாரட் சபினுக்கு எதிரான அவுஸ்திரேலிய ஓபன் அரையிறுதி ஆட்டமாகும்.



இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையே மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் நாளை நடக்கவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக பெங்களூர் சென்ற பாகிஸ்தான் தலைவர் இன்சமாம், அப்துல்ரசாக், இந்திய வீரர் ஹர்பஜன்சிங் ஆகியோர் சிறப்பாக வரவேற்கப்படுகின்றனர்.



## சிந்தனைக்கு

மொழி, கலை,கலாசாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன; ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன; ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாகின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# தர்மசங்கடம்!

பொலநறுவை மாவட்டம் தீவுச்சேனையில் நடந்த மோதல் சம்பவம் சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பெரும் தர்மசங்கடத்தைத் தோற்றுவிப்பதொன்றாகியுள்ளது. ஏனெனில், இச்சம்பவமானது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழ் தேசவிரோதக் கும்பல்களின் முகாம்கள் / நடமாட்டங்கள் என்பன இருந்ததை அம்பலமாக்குவதாகியுள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில், இச்சம்பவத்தை அடுத்து சிறிலங்கா படைத் தரப்பு யுத்த நிறுத்த மீறலில் ஈடுபட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தீவுச்சேனைப் பகுதியில் தேசவிரோதக் கும்பல் ஒன்றின் முகாம் இருப்பதாக படத்துடன் கூடியதான ஆதாரத்துடன் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டபோது அது இராணுவப் பேச்சாளரால் மறுக்கப்பட்டது. அத்தகைய முகாம் எதுவும் அப்பகுதியில் இல்லை என உறுதியாகவும், தெளிவாகவும் அவரால் கூறப்பட்டது.

ஆனால், பத்திரிகைச் செய்தி வெளியாகிய அதிகாலைப் பொழுதிலேயே அப்பகுதியில் இருந்த தமிழ்த் தேச விரோதக் கும்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையானது இராணுவப் பேச்சாளரின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியது. அதாவது, தமிழ்த் தேசவிரோதக் குழுக்கள் இல்லாத இடத்தில் எவ்வாறு அவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக முடியும் என்ற கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய அவலத்தை அவருக்குக் கொடுத்தது.

இது ஒருபுறம் இருக்க, தீவுச்சேனைப் பகுதியில் மோதல் சம்பவம் இடம்பெற்றதன் பின்னர், இப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியா? இல்லையா? என்பதை உறுதி செய்வதிலும் இராணுவத் தரப்பில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், தீவுச்சேனைப் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதி என ஏற்றுக்கொள்வதாயின் தமிழ் இன விரோத ஆயுதக் கும்பல் ஒன்றைப் பராமரித்தமை, உதவியமை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கும்; இப்பகுதியில் அண்மைக் காலத்தில் நடந்த தாக்குதல்கள், மோதல்கள் என்பனவற்றிற்கும் இவர்களே பொறுப்பேற்க வேண்டிய நிலையும் உருவாகிவிடும்.

அவ்வாறு இல்லாது தீவுச்சேனை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதி அல்லவெனில் அப்பகுதியில் மோதல் இடம்பெற்றதாயின் அப்பகுதிக்கு இராணுவமோ அன்றி வேறு ஆயுதப் படையினரோ விரைதல் என்பது யுத்த நிறுத்த மீறலாகும். அதாவது ஒருவர் பகுதிக்குள் மற்றத் தரப்பு அனுமதியின்றிச் சென்றதாகிவிடும்.

ஆனால், இம்மோதலைத் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாடற்ற தீவுச்சேனைப் பகுதியில் மோதல் நடந்ததாகக் கூறிவிட்டு பின்னர் ஆயுதப் படையினரும், பொலிசாரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறுவது எந்த வகையில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு உட்பட்டதாக இருக்க முடியும்? யுத்த நிறுத்த உடன்பாட்டுடன் இதனைச் சம்பந்தப்படுத்தித்தான் பார்க்க முடியுமா? மோதல் இடம் பெற்ற பகுதி சூனியப்பிரதேசம் என அரசாங்கம் கூறுமாயின் அங்கு இராணுவத்தினர் எவ்வாறு செல்ல முடியும்? இது உடன்பாட்டிற்கு மாறானதாகாதா?

அதாவது, இராணுவப் பேச்சாளர் முதலில் கூறியது போன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தீவுச்சேனை இல்லாதுபோனால் அங்கு மோதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து படையினர் அங்கு அனுப்பட்டமை யுத்த நிறுத்த மீறலாக அமையத்தக்கதாகும். தீவுச்சேனை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பின் அங்கு தமிழ் தேசவிரோதக் குழு முகாம் அமைத்து தாங்கியிருக்க அனுமதித்தமை சமாதானத்திற்கு விரோதமானதாகும்.

அதாவது, சிறிலங்கா அரசும், இராணுவத் தரப்பும் தங்கள் கட்டுப்பாட்டில் அப்பகுதிக்குள் இல்லை என்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதானது ஒருவகையில் பரிதாபகரமானது. மறுபுறத்தில் யுத்த நிறுத்தத்திற்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் விரோதமானது. இந்நிலையானது அரசாங்கம் யுத்த காலத்திலும் சரி, யுத்த நிறுத்த காலத்திலும் சரி ஒரே வகையிலான செயற்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றது என்பதையே உணர்த்துவதாயுள்ளது.

இதேவேளை, இராணுவப் பேச்சாளர்களும் உண்மை பேசாதவிடத்து அடிக்கடி இவ்வாறான அவலத்தில் சிக்கிக் கொள்ள வேண்டிய துர்பாக்கியம் தவிர்க்க முடியாததாகிவிடும். யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலிருந்த சிறிலங்கா இராணுவப் பேச்சாளர்கள் சிலர் இராணுவம் தோற்றோடிக்கொண்டிருக்கும் போதே இராணுவம் முன்னேறிச் செல்வதாகக் கூறியதுண்டு. இதனால் பின்னர் கேலிக்குள்ளானதும் உண்டு. இதை ஒத்த தர்மசங்கடங்கள் இராணுவச் பேச்சாளருக்கு சமாதான காலத்திலும் ஏற்படத்தான் வேண்டுமா?

# மலையக மக்களுக்கான சேவைகள் அனைத்தும் இ.தொ.கா ஊடாகவே செய்யப்பட வேண்டும்

## -சனாதிபதியுடனான சந்திப்பில் வலியுறுத்து-

(கொழும்பு)

மலையகப் பகுதி மக்களுக்கான அரசு மேற் கொள்ளும் சேவைகள் அனைத்தையும் இ.தொ.கா. அமைச்சர்கள் ஊடாகவே இடம்பெற வேண்டும என இ.தொ.கா. சிறிலங்கா சனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்துசிவலிங்கம், பிரதி அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி மற்றும் அமைச்சின் அதிகாரிகள் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளனர். பிற்பகல் சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பில் மலையகப் பகுதிக்கான சேவைகளை அமைச்சினூடாகச் செய்வதற்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்பட வேண்டும். என்று அமைச்சர் முத்துசிவ லிங்கம் சனாதிபதியிடம் கோரியுள் ளார். மலையகப் பகுதிக்கான ஆசிரி யர் நியமனம், மற்றும் எழுதுவினை ஞர் நியமனம் உட்பட ஏனைய நியமனங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அமைச்சரும், பிரதி அமைச்சர் செல்லச்சாமியும் சனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளனர். மலையகப் பகுதிக்கு 3500 ஆசிரியர்களை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ள போதிலும் இன்னமும் இந்த நியமனத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மின்சாரசபையை மறுசீரமைத்தால் பணி நிறுத்தப் போராட்டம்

## –தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

இலங்கை மின்சார சபையினை மறுசீரமைத்தல் தொடர்பில் இன்று அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டால் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மின்சார சபையின் ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மின்சார சபையினை மறுசீரமைக்க வேண்டும் என ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கி காலக்கெடு விதித்துள்ளது

இந்த விடயம் தொடர்பில் சரியானதொரு தீர்மானத்துக்கு வராத பட்சத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கவுள்ள 600 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட மாட்டாது என அந்த வங்கி அறிவித்துள்ளது.

எனினும் அந்தக் கடனுதவி பெறப் பட்டால் தற்போது 8000 கோடியாக வுள்ள மின்சார சபையின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும் என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

# பாணந்துறை,மொரட்டுவவில் நேற்று கடல் பெருக்கெடுப்பதாக வதந்தி

## -வதந்திகளை நம்ப வேண்டாமெனப் பொலிசார் கோரிக்கை

கடல் பெருக்கெடுப்பதாக வெளியாகும் தகவல்களை நம்ப வேண்டாம் என சிறிலங்காப்பொலிசார் மக்களைக் கேட்டுள்ளனர்.

நேற்றுப் பாணந்துறை மற்றும் மொரட்டுவப் பிரதேசங்களில் இவ்வாறான வதந்திகளால் மக்கள் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாகினர் இதே வேளை இது தொடர்பாகத் தெரிவித்த பொலிசார் அவசர நிலைகள் ஏற்படும் போது மக்களுக்கு தகவல வெளியிடப்படும் எனத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் வதந்திகளைப் பரப்புவோர் மீது தண்டனை வழங்கப்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (32)

# பிறந்த குழந்தை உயிரிழந்தமை குறித்து பொரள்ள வைத்தியசாலை மீது வழக்கு

பொரள்ள டி சொய்ஸா வைத்தியசாலையின் நிர்வாகக்குழுவை மன்றில் ஆஜராகுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

குறிப்பிட்ட நிர்வாகக் குழுவினரின் கவனயீனம் காரணமாக கடந்த 18 ஆம் திகதி பிறந்த குழந்தை ஒன்று உயிரிழந்ததாகச் செய்யப்பட்ட முறைப் பாட்டின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட குழந்தையின் தாய் குழந்தைப்பேற்றுக்காக வலியினால் வருந்திய வேளையில் தாதிமாரிடம் முறையிட்ட போதும் அதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை

அத்துடன் குழந்தை பிறந்தவுடன் வைத்தியர் 30 நிமிடங்கள் கழிந்து வந்தமை காரணமாகவே தமது குழந்தை இறந்ததாகக் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். இந்த நிலையிலேயே நீதிமன்றம் எதிர்வரும் 29 ஆம் திகதி குறிப்பிட்ட வைத்தியசாலையின் 16ஆம் இலக்க அறையின் நிர்வாகக் குழுவை மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது. (33)

# தனியார் துறை ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு தேவை

## -ஐ.தே.க. அரசாங்கத்திடம் கோரிக்கை

தனியார் துறை ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வை வழங்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது

பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தக் கோரிக்கையை விடுத்தார்

வடக்குக் கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபை நிர்வாகங்களின் மூலமாக வருமானத்தின் மீதான வரி வீதம் ஒன்று முதல் ஐந்து வீதமாக உயர்த்த பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்பட உள்ள இந்த வரி மூலம் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களும் பாரிய நிதி நெருக்கடிக்குவுள்ளாவர் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த மாநாட்டில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய றம்புக்வெல்ல நாட்டில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை உரிய திகதியில் சனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

சனாதிபதி முறையை ரத்துச் செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரவில்லை. எனினும் அந்தப்பதவி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறுவதாகவே அமைய வேண்டும் என்பதே தமது கட்சிக்கொள்கையாகும். என்றும் அவர் குறிப்பிட்டார்

# பிரிட்டன் வைத்தியக் குழுவினர் திருமலையில் 4000 பேருக்குச் சிகிச்சை

(திருகோணமலை)

பிரிட்டனிலிருந்து வந்த லண்டன் பகவான் சாயிசமித்தியைச் சேர்ந்த 152 பேர் கொண்ட வைத்தியக் குழு, இலங்கையில் கடல் கோளினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, மற்றும் தென்பகுதியில் கம்புறுப்பிட்டிய, காலி, மாத்தறை, ஆகிய இடங்களிலும் நடமாடும் வைத்திய முகாம்களை நடத்திவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 100 கற்றாக் சத்திர சிகிச்சைகளை சாயி வைத்தியக் குழுவைச் சேர்ந்த இரண்டு கண் வைத்தியர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் மேற்கொண்டனர். திருகோணமலை வைத்தியசாலையில் பணிபுரியும் கண் வைத்திய நிபுணர்களுடன் இணைந்தே கற்றாக் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக, சாயி வைத்தியக் குழுவின் திருகோணமலை இணைப்பாளர் அனில்பட்டேல் தெரிவித்தார். திருகோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்ட வைத்திய முகாம்களில் இதுவரை 4000 பேருக்கு மேல் சாயி வைத்தியாளர்களால் சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (25)

# சுனாமி வெளிநாட்டு உதவி கிடைக்கவில்லை

# அரசாங்கப் பணமே செலவிடப்படுகிறது

## அமைச்சர் கதிர்காமர் பி.பி.ஸிக்குத் தெரிவிப்பு

வடக்குக் கிழக்கிற்கு சுனாமிப் பாதிப்பிற்கான உதவிகளை வழங்கும் பொதுக் கட்டமைப்பிற்கான ஒப்பந்தத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். பி.பி.ஸியின் உலக சேவையின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே கதிர்காமர் இவ்வாறு கூறினார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் குறுகிய காலத்தில் இவ்வாறான ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடியும் என்றால் அது பாரிய வெற்றியாகுமெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை வெளிநாட்டு நிறுவனங்களும், நாடுகளும் உறுதியளித்தவாறு உதவிகள் இதுவரை அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லையெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்கள் ஒரு குறிக்கோளுடன் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கடைசியாக எனக்குக் கிடைத்த தகவலின்படி இந்த ஒப்பந்தம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு நாங்கள் விடுதலைப்புலிகளிடம் கேட்டுள்ளோம்.

நோர்வே வெளியுறவு அமைச்சர் தொலைபேசியில் உரையாடியதாக சனாதிபதி என்னுடன் உரையாடினார். இதன் முன்னேற்றங்கள் குறித்து நோர்வே வெளியுறவு அமைச்சருக்குத் தெரிவித்ததாகவும் சனாதிபதி கூறினார்.

இங்கு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதென்பது உங்களுக்கு அவசியமெனப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் எல்லா விதிகளும் உள்ளெடுக்கப்படவேண்டும். இத்தகைய ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கான முகாமைத்துவத்திற்கு வருவதென்பது மிகப் பெரிய முன்னேற்றமாகும்.

எமக்கு வெளிநாடுகள் தருவதாகக் கூறிய நிதியுதவிகள் எதுவும் எமக்குப் பணமாகக் கிடைக்கவில்லை.

எமது திறைசேரியில் உள்ள நிதியில் இருந்துதான் இடம்பெயர்ந்தோருக்கு உதவிகளை வழங்குகின்றோம். இதற்காக ஒரு கிழமைக்கு 188 மில்லியன் ரூபா வரை அரசு செலவிடுகின்றது எனவும் அவர்கூறினார்.


பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் ஜே.வி.பி அரசியலிலிருந்து விலகப் போவதாகக் கூறி உள்ளதே எனக் கேட்டபோது;

அவ்வாறானதொரு நிலை தோன்றாதென அவர்கள் என்னிடம் தெளிவாகக் கூறியுள்ளனர். அரசாங்கத்தில் இருந்து பிரிந்து செல்லும் நோக்கம் எதுவும் இல்லையெனக் கூறினார்.

அவர்கள் சில வேளைகளில் சில கொள்கை நிலைப்பாடுகளை எடுக்கலாம். ஏனெனில் அவர்கள் கூட்டமைப்பின் பங்காளிகள், அவர்களது தத்துவங்கள் வேறுபட்டவை. தமது விருப்பின்படி சொந்தச் செயற்பாடுகளையே மேற்கொள்ளலாம்.

கட்டமைப்பில் உள்ள அங்கத்தவர்கள் அனைத்தும் ஒரே நோக்கில், ஒரே குறிக்கோளுடன் செல்வதென்பது உலகின் எந்த நாட்டிலும் நடைபெறுகிறதொன்றல்ல. அவர்கள் பேச்சுவார்த்தைத் தீர்விற்கு ஆதாரமானவர்கள். சமாதானத்திற்கு எதிரானவர்களல்ல என்றார்.

# அவுஸ்திரேலிய வைத்திய நிபுணரின் சிகிச்சை இன்றும் தொடர்கிறது



அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருக்கும் நெஞ்சு தொடர்பான சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் நற்குணம் அவர்களால் நெஞ்சு தொடர்பான சிகிச்சை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்றும் மேற்படி சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதென மாவட்ட வைத்திய அதிகாரி தெவித்தார்.

அத்துடன் அமெரிக்காவில் இருந்து வ்ருகை தந்த சத்திரசிகிச்சை நிபுணர்கள் குழுவினரால் மாவட்ட வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தில் கேணியா, கட்டிகள் போன்ற நோய்களுக்கும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (கு)

### திருமலை...

நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### தீவுச்..

ஆனால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்படவில்லை என்பது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு குற்றம் சுமத்தியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. (32)

### பொதுக்

பணிகளை மேற்கொள்வது ஆற்றலை வீணாக்கும் செயல். எனவே ஆழிப்பேரலை தொடர்பான அமைச்சுக்களின் எந்த அழைப்புகளையும் இனிக் கூட்டமைப்பு ஏற்காது என்றார் அவர்.

### ராணுவக்....

போதும் தற்போதைய சூழலில் நோர்வே சமாதான முன்னெடுப்பாளரின் ஆலோசனைப்படி விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டுள்ளோம். தாமதமின்றி மனிதாபிமான செயற்பாடுகளுக்காக செயற்படும் நேரம் இதுவாகும். எனவே நாம் பொறுப்புடன் செயற்பட்டு நோர்வேயின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கலில் விடுதலைப்புலிகளின் பங்களிப்புப் பற்றி சர்வதேச நலனுக்கான பிரதித்தலைவர் மைக்கல் மோப் கேட்ட கேள்விக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் பதிலளிக்கையில், விடுதலைப் புலிகள் இவ்வுடன்படிக்கையின் மனிதநேயத்திற்கு மதிப்பளிப்பதாகவும் இராணுவச் செயற்பாடுகள் மேற்கொள்வதில்லையெனவும் பொது மக்களின் இயல்பு வாழ்வு சட்டம் என்பன விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒழுங்காகப் பேணப்படுவதாகவும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இது பிரச்சினைக்குரியதாக இருப்பதாகவும் தெரிவித்தார். அதாவது யாழ். குடாநாட்டில் போரினால் இடம்பெயர்ந்த ஒருபகுதியினர் சமாதான காலப்பகுதியில் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான மக்கள் முல்லைத்தீவுக் கடற்கரை போன்ற கடற்கரைப் பிரதேசத்தில் வாழ்ந்து சுனாமிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். எனவும் கூறினார்.

அரசியற்படுகொலைகள் பற்றிஅவர் கூறுகையில், இது ஒரு மனவருத்தத்திற்குரிய விடயம்போர்நிறுத்த உடன்படிக்கைகளின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் எவரும் நடமாடக்கூடாது இருந்தும் விடுதலைப்புலிகளின் அரசியற்பிரிவைச் சேர்ந்தவர்கள் பலர் அரசியல், சுனாமி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர். எனத் தெரிவித்தார்.

சுனாமி இரு பகுதியினருக்கும் சமாதான முன்னெடுப்பிற்கு ஒருசிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியிருப்பதான கூற்றிற்கு அரசியல்துறைப்பொறுப்பாளர் பதிலளிக்கையில், விடுதலைப்புலிகள் மனித நேய உதவிகளிற்கும், சுனாமி அனர்த்தத்திற்கான மீள்நிர்மாணப் பணிக்குப் இணைந்து செயற்படுவதற்கான ஒரு செயற்றிட்டத்திற்கு மனப்பூர்வமான செய்திஒன்றை விடுதலைப்புலிகள் அரசிற்கு அனுப்பியதாக அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இதன்போது சுவிற்சர்லாந்தின் வெளிவிவகாரத்தூதுவர் தோமஸ் கிறிஸ்மிங்கர் கருத்துத் தெரிவிக்கையில்,

போர் நிறுத்த உடன்படிக்கையைப் பேணல், சுமுகமான நிலைமை என்பன சுனாமி இணைந்த செயற்றிட்டத்திற்கு இன்றியமையாதது எனத் தெரிவித்தார்.

அரசுடன் இணைந்த செயற்றிட்டத்திற்கான ஒரு தொழிற்பாட்டுக்கட்டமைப்பை உருவாக்குவதில் விடுதலைப்புலிகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள விட்டுக் கொடுப்புகள் பற்றியும், தமது திருப்தியை வெளியிட்டதுடன் சுவிஸ்அரசாங்கம் இரு பிரிவினருக்குமிடையிலான ஒரு புரிந்துணர்வை, இம் மனித நோய பிரச்சினை முகாமைத்துவத்திற்கு எதிர்பார்ப்பதாகவும், இது இரு பகுதியினருக்கும் இடையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த இது உதவும் என்றும் இடைநிறுத்தப்பட்ட சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதற்கு அத்தியாவசியமான ஆதாரமாக அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் சுவிஸ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தைச் சேர்ந்த ஆசிய அமெரிக்க மனிதநேய உதவித்திணைக்கள நிகழ்ச்சி அலுவலர் இவான் கவுரி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அரசியற் பிரிவு அலுவலர் போறிஸ் றிச்சாட்,மனித பாதுகாப்பு சமாதானக் கொள்கைக்கான அரசியற் பிரிவு அலுவலர் சிடோறியா கப்றியெல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# போரியல் வரலாற்றுக் காட்சிப்படக்கூடம் இத்தாவில் பகுதியில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவகத்தினரின் ஏற்பாட்டில் போரியல் வரலாற்று ஆவண காட்சிப் படக் கூடத் திறப்பு நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதியன்று இத்தாவில் சந்தி பளையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# வடமராட்சி கிழக்கில் 3 இடங்களில் தற்காலிக குடியிருப்புகள் இன்று கையளிப்பு

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு வாழ் மக்களுக்கான தற்காலிகக் குடிமனைகளைக் கொண்ட குடியிருப்புக்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த வேலைத்திட்டச் செயற்பாடுகளுக்கூடாக அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டும் வருகின்றன. அதன் தொடர் நடவடிக்கையாக இன்று மூன்று வெவ்வேறு இடங்களில் மூன்று குடியிருப்புக்கள் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

மருதங்கேணியில் காலை 9.00 மணியளவிலும், வத்திராயன் வாரிவிட்டான் என்ற இடத்தில் பிற்பகல் 4.00 மணியளவிலும், வத்திராயன் அரசடி என்ற இடத்தில் மாலை 5.00 மணியளவிலுமாக குடியிருப்புக்கள் திறந்துவைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

# கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி. வெளியேறின் எமக்கு அமைச்சர் பதவிகள் கிடைக்காது

## –பிரதமருக்கும் அதே கதிதான் என்கிறார் அநுரா

ஜே.வி.பி. எமது கூட்டமைப்பிலிருந்து விலகினால் எமக்கு அமைச்சர் பதவிகள் கிடைக்காது. பிரதமருக்கும் அதே கதிதான் ஏற்படும். எனவே எமது அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக்குள் இருந்து கொண்டு குழிபறிக்க வேண்டாம் என அமைச்சர் அநுராபண்டார நாயக்க தெரிவித்தார்.

பீலங்கடவெலயில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க, பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச இருவரும் அரசாங்கத்தில் இருந்து நாங்கள் விலக மாட்டோம் என்று சமீபத்தில் கூறியுள்ளமையை நான் வரவேற்கின்றேன்.ஐக்கிய தேசியக்கட்சியை மீண்டும் நாட்டில் ஆட்சி அமைக்க விட மாட்டோம். அவர்கள் மீண்டும் அரசாங் கத்தைக் கைப்பற்ற முடியாது. இன்று சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன முற்றாக அழிந்து போயின. இன்று நாட்டில் ஜே.வி.பி பலம் வாய்ந்த இடது சாரிக் கட்சியாக உள்ளது. ஆனால் சிலர் எமது கட்சியில் இருந்து கொண்டு அவர்களை விமர்சனம் செய்கின்றனர் என அவர் தெரிவித்தார்.


# 31 ஆம் நாள் நினைவலைகளும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அன்புடையீர்!

23.03.2005 புதன்கிழமை மாலை 5 மணியளவில் சிவப்பேறடைந்த எங்கள் பேரன்புக்கும் வணக்கத்துக்குமுரிய தந்தையார் உயர்

## திரு.வே.க.ஏரம்பு

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 23.03.2005 காலை 7.00மணிக்கும், வீட்டுக்கிருத்தியம் 25.03.2005 வெள்ளிக்கிழமை காலை 10.00மணிக்கும் அன்னாரது இல்லத்திலும், தூயவன் அரசறிவியல் கல்லூரியிலும் நடைபெறும். அவ்வமையம் தாங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து எமது தந்தையின் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையிற் கலந்து அமுதருந்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம். இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு தாழ்மையுடன் அன்புள்ளங்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி.11574)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது